Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 17 (12.11.2003) புதன்கிழமை இதழ்:43

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சு-1750)

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கம் இழுக்க பொ.ஐ.மு. முயற்சி!

### 6 கோடி ரூபா வரை பேரம் நடந்தது என்கிறார் எஸ்.பி.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் சிலர், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பெருமளவு பணம் கொடுத்து தமது பக்கம் இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சுமார் 5 கோடி முதல் 6 கோடி வரை கொடுத்து தம்பக்கம் இழுக்கும் முயற்சிகளில் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் சிலரும் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர், பொலிஸ் மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினருக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஒழுங்கா நடந்தா ஒழுக்காற்று நடவடிக்கை வருமே....?

## ஆனந்தசங்கரி மீது ஒழுங்கு நடவடிக்கை!

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, இரா.சம்பந்தன் தெரிவித்ததாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முரணான வகையில் ஆனந்தசங்கரி தெரிவித்துவரும் கருத்துக்களுக்கு எதிராகவே இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை - நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் மட்டக்களப்பு மாவட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான பேச்சுகள் குறித்து ஆராய்வதற்காக

# ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் இன்று சந்திப்பு!

## ஐக்கிய தேசிய முன்னணி அரசு அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.**

இந்தச் சந்திப்பில், தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக மாபெரும் கூட்டணியை உருவாக்குவது சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியுடன் பேசப்போவதில்லையென்றும் சமாதான முயற்சிகள் குறித்தே பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய அரசு அமைப்பது தொடர்பாகவும், நாட்டின் இன்றைய நிலைமை குறித்து ஆராய்வதற்காகவும், தன்னைச் சந்திக்க வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டிருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றுப் பிரதமர் இன்று ஜனாதிபதியைச் சந்திக்க இருக்கிறார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் கண்காணிப்புக் குழுவினருடன் பேச்சு!

இலங்கை வந்திருக்கும் நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்றுக் காலை பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பாக பதில் தலைவர் ஹொக்லண்ட் கலந்துகொண்டார். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தற்போதைய செயற்பாடுகள், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிலவரங்கள் தொடர்பாக ஹொக்லண்ட் இந்தப் பேச்சுவார்த்தையின்போது நோர்வே பிரதிநிதிகளுக்கு விளக்கியதாக, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகர் டோட்ரயர் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின்போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் எதிர் நோக்கியிருக்கும் சர்ச்சைகள் குறித்து எதுவும் பேசப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் தேசிய அரசு யோசனையை பிரதமர் ரணில் ஏற்றுக் கொள்ளமாட்டார்!

### அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

### சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அமைந்துள்ள

## குடியிருப்புக்களை விடுவிக்கக் கோரி படைமுகாம் முன்பாக மக்கள் மறியல்!

# பிரதமர் ரணில் ஏற்றுக் கொள்ளமாட்டார்!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் தேசிய அரசாங்க யோசனையை பிரதமர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த முடிவைத் தெரிவிப்பாரெனவும் அரசியலமைப்பு விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கிறது. எனவே, ஜனாதிபதி சந்திரிகா கேட்டதுபோல, தற்போது தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டிய தேவை இல்லையென்பதே அரசாங்கத்தின் எண்ணமாகும்.

எனவே, ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களையும் மீள அரசிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில், சமாதான முன்னகர்வின் முழுப்பொறுப்பையும், ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரி - கச்சாய வீதியில அமைந்துள்ள

# குடியிருப்புக்களை விடுவிக்கக் கோரி படைமுகாம் முன்பாக மக்கள் மறியல்!

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது குடியிருப்புக்களை விடுவிக்கக் கோரி, சாவகச்சேரி - கச்சாய் வீதிப் பகுதியில் வசிக்கும் சுகாதாரத் தொழிலாளர்கள், கச்சாய் வீதியிலுள்ள புகையிரதக் கடவைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு முன்னால் நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த மறியற்போராட்டம் நண் பகல் 12 மணிவரை நீடித்தது.

படையினரின் பாதுகாப்பு வலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் முட்கம்பி தடுப்பு வேலியினுள் இவர்களது குடியிருப்புக்கள் அமைந்துள்ளன. தற்போது பெய்துவரும் மழையினால் இவர்கள் தற்காலிகமாக அமைத்து தங்கியுள்ள கொட்டகைகளினுள்ளும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் ஏனைய பிரச்சினைகளைவிட சமாதானப் பேச்சுவார்த்தை அவசியம்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்புக்களை முன்னகர்த்திச் செல்ல வேண்டியது அவசியமானதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் நடைபெற்றபோது அதில், உரையாற்றிய பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் வரலாற்றில் எந்தவொரு கட்சியும் சந்திக்காத பிரச்சினைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தற்போது முகம் கொடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் பெற்ற பெரும்பான்மை வாக்குகளுக்கு மத்தியில் மூன்று அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியினால் பொறுபபேற்கப் பட்டுள்ளன.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையினால் வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக மக்கள் பெரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் முன்னாள் படையதிகாரிகள் கடற்புலிகளுக்கு தாக்குதல் பயிற்சியாம்!

## ஜே.வி.பி சார்பு இணையத்தளம் கூறுகிறது

(கொழும்பு)

இலங்கை கடற்படையினருக்கு எதிராக நீருக்கு அடியிலான தாக்குதல்களை மேற்கொள்வது குறித்து கடற்புலிகளுக்கு நோர்வேயின் முன்னாள் விசேட படைப்பிரிவு அதிகாரிகள் பயிற்சி வழங்குதாக, ஐ.பி.எஸ். செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி ஜே.வி.பி சார்பு இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாய்லாந்தின் கரையோரப் பகுதியில் கடற்புலிகள் தமது தாக்குதல் வலுவை அதிகரிப்பதற்கான பயிற்சிகளிலும், கடற்படையினர் மீதான தாக்குதல் ஒத்திகைகளையும் மேற்கொண்டுவருவதாகவும் இதற்கான பயிற்சிகளை நோர்வேயின் முன்னாள் விசேட படையதிகாரிகள் வழங்கிவருவதாகவும் அந்தச் செய்தி குறிப்பிட்டிருக்கிறது.

மேலும், தாய்லாந்து புலிகளுக்கு தளம் அமைக்க வசதிகளை வழங்கி வருவதாகவும், அங்கு புலிகள் கடல் நடவடிக்கைளைக் கட்டியமைதது வருவதாகவும் இறங்குதுறையொன்றை இயக்கி வருவதாகவும் செய்தி வெளியிட்டுள்ள மேற்படி இணையத்தளம் -

புலிகளின் உயர்மட்ட உறுப்பினர் கிறிஸ்ரி றெஜினோல்ட் லோரனஸ் என்பவரே இந்த கடல் நடவடிக்கைகளை இயக்கிவருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த இறங்குதுறையிலிருந்து 2000 ஆம் ஆண்டு தாய்லாந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# 2004 ஆம் ஆண்டு கல்வியியற் கல்லூரிகளுக்கான ஆசிரிய பயிலுனர்களை உள்வாங்கும் தெரிவுமுறை

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் 2004 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பான கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு வேண்டிய பணிகளில் கல்லூரிகளின் பீடாதிபதிகள் ஈடுபட்டு வருகின்றனர். வெகு விரைவில் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு கல்லூரிகளிலுமுள்ள துறைகளுக்கு அந்தந்தக் கல்லூரிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் சில விசேட ஏற்பாட்டின்பேரில் மாற்று ஒழுங்குகளும் தேவை கருதி திட்டமிடப்பட்டுள்ளன.

உதாரணமாக நாடு முழுவதுமிருந்தும் உடற்கல்வித்துறைக்கு விண்ணப்பித்த தமிழ், சிங்கள விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை ஊவா தேசிய கல்வியியற் கல்லூரியில் செயல்முறைப் பரீட்சையுடன் நடைபெறவுள்ளது.

இதற்கான இணைப்பாளர்களாக மேற்படி கல்லூரியின் பீடாதிபதி எம். எம். சந்திரசேகரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குரிய துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் நேர்முகப்பரீட்சைச் செயற்பாடு, நேர்முகப்பரீட்சை சபை ஒன்றின்கீழ் மையப்படுத்தப்பட்டுள்ளது. இச்சபையின் இணைப்பாளராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நேர்முகப்பரீட்சை சபையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே.பேணாட்டும் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ். பாக்கியராசாவும் கடமையாற்றி தெரிவில் ஈடுபடுவர்.

இந்த மூன்று கல்வியியற் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ,திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. நேர்முகப்பரீட்சை வர்த்தமானி அறிவுறுத்தலுக்கிணங்கவே நடைபெறவேண்டும். வழக்கமாக கவனத்தில் கொள்ளப்படும் வயது, தகுதி நிலை, க.பொ.த (உ/த) புள்ளிகள் (இந்தத் தடவை Z - Score) மற்றும் நிபந்தனைகள் இம்முறையும் கவனத்தில் கொள்ளப்படுவதுடன், 2001,2002 ஆகிய இரு ஆண்டுகளிலும் க.பொ.த (உ/த) இல் சித்தியடைந்தவர்கள் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இவ்வாறு உள்வாங்கப்படும்போது குறிப்பிட்ட ஒரு துறைக்கு குறிப்பிட்ட ஒரு கல்லூரியில் அனுமதிக்கப்பட வுள்ள மொத்த எண்ணிக்கையின ரில் 50 வீதம் 2001 ஆம் ஆண்டிலி ருந்தும் மிகுதியான 50 வீதம் 2002 ஆம் ஆண்டிலிருந்தும் தெரிவுசெய்யப்படவேண்டும். அவ்வாறு எண்ணிக்கை ஆண்டு ரீதியாகப் பிரித்து ஒதுக்கப்பட்ட பின்னர் அந்தத் தொகையில் 50 வீதம் திறமை அடிப்படையிலும் மிகுதி 50 வீதம் கஷ்டப் பிரதேச அடிப்படையிலும் தெரிவு இடம்பெற வேண்டும் என்பது கல்வி மனிதவள விருத்தி அமைச்சின் கல்விக் கல்லூரிகள் சபையின் (College of Education Board) தீர்மானமாகும்.

கஷ்டப் பிரதேச அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் மாணவர்தொகை, பிரகடனப்படுத்தப்பட்ட கஷ்டப் பிரதேசங்கள் மக்கள் தொகை அடிப்படையில் கல்வியமைச்சால் தீர்மானிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் குழு இணைப்பாளருக்கு அறிவிக்கப்படும். அத்தொகை அடிப்படையில் மட்டுமே கஷ்டப் பிரதேசத்திற்குரிய மாணவர் தெரிவு நடைபெறும்.

ஆனால், அதன் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்போது ஏதாவது மாவட்டங்களில் குறிப்பிட்ட துறைக்கு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களால் தகுதியில்லாதவிடத்து அந்த வெற்றிடம் திறமை அடிப்படையில் நிரப்பப்படும்.

இந்த வகையாக 2004 ஆம் ஆண்டுக் கான அனுமதி தெரிவுமுறை தெளி வாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவுமுறையானது தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தாலும், 2001,2002 ஆகிய இரு ஆண்டுகளிலும் தெரிவுகள் சமமானதாக உள்ளடக்கப்பட்டுள்ளதால், விண்ணப்பதாரிகளிடத்தும், ஏனையோரிடத்தும் சில விளக்கக் குறைவுகள் ஏற்படவாய்ப்புண்டு. மாணவர்கள் தெரிவுசெய்யப்படும்போது துறைக்குத்துறை வெட்டுப்புள்ளிகள் வேறுபடுவது பொதுவானது. திறமை அடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரர்கள் புள்ளிக்கும் கஷ்டப் பிரதேச அடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரர்கள் புள்ளிக்கும் வேறுபாடு இருக்கும்.

ஆனால், திறமை அடிப்படையில் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் புள்ளிகள் யாவருக்கும் குறிப்பிட்ட துறைக்கு சமமாகவிருக்க, கஷ்டப் பிரதேசத்துக்குரிய புள்ளிகள் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும் தன்மை கொண்டமையும், இந்த அடிப்படையில், ஒரு குறைந்த புள்ளி இடம்பெறலாம். திறமை அடிப்படையாகவிருந்தாலும் சரி இந்த வேறுபாடு பாடத்துறைக்குத்துறை ஏற்படக் கூடிய வாய்ப்புகளுண்டு.

கடந்த காலங்களில் இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாத விண்ணப்பதாரிகள் இது தொடர்பாக எம்முடன் தொடர்பு கொண்டு அல்லது நாடாளுமன்ற அங்கத்தவர்களிடம் முறையிட்டு, எங்களைவிடக் குறைந்த புள்ளிகள் உள்ளவர்களை அனும தித்திருக்கிறார்கள் எனக்குக் கூடிய புள்ளி உண்டு. எம்மை எடுக்கவில்லையென்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

நாமும் அவர்கள் விபரத்தைப் பெற்று எம்மிடமுள்ள பட்டியல்களுடன் பரிசீலித்துப் பார்க்கும் போது அவர்கள் வேறு துறைசார்ந்தவர்களாகவோ அல்லது வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்களாகவோ இருந்திருக்கின்ற நிலையினைக் கண்டிருக்கின்றோம்.

இதற்கு மேலாக இந்தத் தடவையும் 2001, 2002 ஆம் ஆண்டுகளில் 50% என்ற அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்போது மேலும் பல விளக்கச் சிக்கல்கள் ஏற்படவாய்ப்புண்டு. எவ்வாறெனில் மேற்கூறிய அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு 50%மும் 2002 ஆண்டின் வெட்டுப் புள்ளி கூடுதலாகவும், மற்றைய ஆண்டின் வெட்டுப்புள்ளி குறைவாகவும் அமையலாம். இச்சந்தர்ப்பத்தில் இரண்டு வேறுபட்ட வெட்டுப் புள்ளிகளுடன் ஒரு துறையில் வெட்டுப்புள்ளியைக் கொண்ட ஆண்டில் சித்தியடைந்த அவ்வெட்டுப்புள்ளிக்கு அடுத்ததாக உள்ள மாணவரின் புள்ளி குறைந்த வெட்டுப் புள்ளியைக் கொண்ட ஆண்டின் விண்ணப்பதாரி பெற்ற புள்ளியைவிடக் கூடியதாகவிருக்கலாம். ஆனால், அனுமதி கிடைக்காதிருக்கலாம். தெரிவு முறையில் விளக்கமின்மையிருப்பின் கூடிய புள்ளி பெற்றும் தனக்கு அனுமதி கிடைக்கவில்லையென ஆதங்கப்படலாம். எனவே, விண்ணப்பதாரிகள் தெரிவுமுறையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளல் சிறப்பானது. மேற்கூறிய முறையிலேயே தெரிவுகள் நடைபெறவுள்ளன.

மேலும் விளக்கம் தேவையானவர்கள் அந்தந்தக் கல்லூரிப் பீடாதிபதிகளுடன் தொடர்பு கொண்டு சந்தேகங்களை நீக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## திருநெல்வேலியில் வீதி புனரமைப்புப் பணி ஆரம்பம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பகுதியின் பலாலி வீதி இரும்மருங்கும் வீதி அபி விருத்தி அதிகார சபையினால் புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதான வீதியூடாக கனரக வாகன போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுவதால் திருநெல்வேலி சந்திக்கும், தபால் பெட்டி சந்திக்கும் இடையில் வீதியானது பெரும் குன்றும் குழியாகக் காணப்படுகிறது. இவற்றில் மழைநீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளுக்கக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. பலகாலமாக இந்த வீதியின் இரு மருங்கிலும் கற்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (205)

## தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

குளப்பிட்டி ஒழுங்கையில் தங்கச் சங்கிலியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி இல 34, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கிலத் துறையினரால் நொவிஸ் (Novice) ஆங்கில இதழ் வெளியீடு இன்று காலை 10 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் மேற்படி கல்லூரியின் முன்னாள் பணிப்பாளர் க.ஜெயரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.



இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் மூத்த பத்திரிகையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பத்திரிகையாளர்களர்கள் - இடமிருந்து வலமாக எல்.எம். சலீம், தம்பு விவேகராசா, இராசநாயகம் உதயகுமார், சின்னத்துரை தில்லைநாதன், காந்தமுத்து இரத்தினலிங்கம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# பாதணி விநியோகத்தில் சீர்கேடு பாதுகாப்பு ஊழியர்கள் விசனம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் 2003ஆம் ஆண்டிற்கான பாதணிகள் (சப்பாத்து) இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. பாதணிகள் நிர்வாகத்தினரால் எடுத்துவரப்பட்ட போதும், அவை பாவனைக்கு ஏற்றதாக இல்லையென பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

2003 ஆம் ஆண்டுக்கென தற்போது தருவிக்கப்பட்டுள்ள பாதணிகள் 2003 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கூட விநியோகிக்கப்படாமல் உள்ளது. ஏனெனில், அவை தரம் குறைந்தவையாகவும், அளவுகளில் வித்தியாசங்கள் காணப்படுவதினாலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவற்றை வழங்க முடியாது உள்ளது. கடந்த காலங்களில்கூட இப்பாதணி விவகாரமானது சம்பந்தப்பட்டவர்களினால் சுட்டிக் காட்டப்பட்டு பெரும் விமர்சனத்திற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. இப்பாதணி கொள்வனவு சம்பந்தமாக நிர்வாக உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கே அடிப்படைக்காரணமெனக் சுட்டிக்காட்டப் படுகிறது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவ் அதிகாரிகளின் நடவடிக்கைகளால் பெரும் விசனமடைந்து காணப்படுகின்றனர்.

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

நடராஜா பாக்கியம் - நாகர்கோவில் வடக்கு, அல்லது மணியரசன் குடியிருப்புத் திட்டம், அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பு.

ஐயம்பிள்ளை ருத்திரமூர்த்தி- இல.03, அகதிமுகாம், நாகர்கோவில்.

சின்னப்பு தர்மலிங்கராஜா - நாகர்கோவில் வடக்கு, நாகர்கோவில். வி.வி.ராஜேந்திரன் - உப-தபால் அலுவலகம், நாகர்கோவில். திருமதி தேவதாஸ் அருந்தவமலர் - நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில். திருமதி ஸ்ரனிஸ்லோஸ் மேரிஜரிஸ் - 5/1, 1ஆம் ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். செல்லர் சாமிநாதர் அன்ரனி - பொக்கணை, புதுக்குடியிருப்பு. சின்னையா தர்மலிங்கம் - மணியரசன் குடியிருப்புத்திட்டம், அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பு.



தீபாவளியை முன்னிட்டு தும்பளை தெற்கு நாவலடிச் சந்தி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினர் சார்பில் அதன் தலைவர் சி.கனகரத்தினத்தால், ஸ்ரீ பரமானந்தா இல்ல அநாதை சிறுவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# உதவிப் பணம் பெறுவோர் விபரம் சேகரிக்கப்படுகிறது

பொதுசன உதவிப்பணம் பெறுவோரில் தீபாவளித் தினத்தில் வழங்கப்பட்ட உடுபுடைவை கிடைக்காதவர்களின் விபரங்களைத் திரட்டும் பணியில் இந்து கலாசார அமைச்சு ஈடுபட்டுள்ளது.

கடந்த தீபாவளி தினத்தில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டிருந்தன.

உடுபுடைவைகள் வழங்குவதற்குத் தெரிவுசெய்யப்பட்டோரில் பலருக்கு சில உதவி அரச அதிபர் பிரிவுகளில் இன்னமும் அவை வழங்கப்படவில்லை.

இது குறித்து ஆராயும் பொருட்டும், உடுபுடைவை வழங்கப்படாமல் தவறவிட்டோர் மற்றும் உடுபுடைவை பெறத் தகுதியற்றோர் எனக் கணிக்கப்பட்டு அதனைப் பெறாதோர் குறித்தும் விபரமறியவே இந்தப் புதிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்தப் பரிசளிப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சட்டத்தரணி சோ.சிவனருள்சுந்தரம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், தேவயானி நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)

அன்பளிப்பு
மில்க்வைற் சோப் மேலுறை பத்து அனுப்பி திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
மில்க்வைற்,
த.பெ.இல.77,
யாழ்ப்பாணம்.
(சி-1770)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

# புலிகளிடம் பயிற்சிபெற்ற ஆறு இளைஞர்கள் கைது!

## களனி பொலிஸார் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்ற நான்கு இளைஞர்களை, தாம் கைதுசெய்துள்ளதாக களனி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரிபத்கொட பகுதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், பின்னர் அவர்கள் கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையில், மேலும் நான்கு பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்து, பின்னர் விலகியவர்களென பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இவர்களுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருக்கின்றனவா என்பது பற்றி தாம் ஆராய்ந்து வருவதாக, விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சந்தேகத்துக்கிடமாக நடமாடும் கப்பலைத் தாக்கும்போது கண்காணிப்பு குழுவினரை அழைத்துச்செல்ல வேண்டாம்

## கடற்படைத் தளபதி தயாசந்தகிரி

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான முறையில், கடலில் நடமாடும் கப்பல்கள் மீது இரகசியமான முறையில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை அழைத்துச் செல்ல வேண்டாம் என, கடற்படைத் தளபதி தயாசந்தகிரி கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனாலும், கடற்படையினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது, கண்காணிப்புக் குழுவினரை அழைத்துச் செல்லலாம் எனவும், அவர் கடற்படையினருக்கான தனது உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டின் மூலமான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம், கண்காணிப்புக் குழுவினரின் சேவையை வழமையான கடல் நடவடிக்கையின்போது, கடற்படையினர் பெற்றுக்கொள்ளுமாறு, கடற்படையின் கட்டளை அதிகாரிகளுக்கு தயா சந்தகிரியால் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது.

அண்மையில், விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்று, கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய தகவலையடுத்து தப்பிச்சென்றுவிட்டது என்ற குற்றச்சாட்டுக்குப் பின்னரே தாம் இந்த நடவடிக்கையியை மேற்கொண்டதாக கடற்படைத்தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

# பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு யாரிடம் உள்ளதோ அவர்கள்தான் பேச்சுக்களை முன்னெடுக்க முடியும்

## அரசியல் அவதானிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் யாருடைய அதிகாரத்தில் இருக்கிறதோ, அவரே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியுமெனக் கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள், இரு தரப்புக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப் பட்டுவருகின்றன.

இந்தப் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை, இரு தரப்புப் படைகளுடனும் சம்பந்தப்படுவதால், பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பாக இருக்கக்கூடியவர்களே, போர்நிறுத்த உடன்படிக்கையின் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்தமுடியும்.

அவ்வாறு போர்நிறுத்த உடன்படிக்கையின் உறுதித்தன்மையைப் பேணக்கூடியவரே, சமாதான முயற்சிகளையும் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடியவராக இருப்பர் என அந்த அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வகையில், தற்போது பாதுகாப்புத்துறை அமைச்சைப் பொறுப்பெடுத்துக் கொண்டுள்ளதன்மூலம், ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டிய பொறுப்பையும் தானே எடுத்துக்கொண்டவராகிறார் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஏலவே பல விரும்பத்தகாத அனுபவங்களைக் கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், அவருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த முன்வருவார்களா என்பதும் சந்தேகமே எனவும் அவதானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# சவூதி குண்டு வெடிப்பில் நான்கு இலங்கையர் காயம்

(ரியாட்)

சவூதியின் தலைநகர் ரியாட்டில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், நான்கு இலங்கையர்களும் காயமடைந்திருப்பதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.



நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு தேனகம் விடுதியில் பசுமை சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு நடந்தபோது, சஞ்சிகையின் முதலாண்டு மலரை மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் வெளியிட்டு வைக்க மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் பெற்றுக் கொள்வதனைப் படத்தில் காணலாம்.

# சமாதான நடவடிக்கைகளை பொறுப்பேற்பதில் ஜனாதிபதிக்கு சிக்கல்கள் எதுவும் இல்லை!

## ஜனதாஸ பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளைப் பொறுப்பேற்பதில், ஜனாதிபதிக்குச் சிக்கல்கள் எதுவும் இல்லையென்று, ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர்நாயகம் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும், நேர்மையான குறிக்கோளுடனேயே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜனாதிபதி - பிரதமருக்கு அழைப்புவிடுத்தார் என்றும், ஊடகப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சமாதான நடவடிக்கைகளை - ஜனாதிபதி பொறுப்பேற்கவேண்டும் என்று அமைச்சரவையின் முடிவு குறித்து கேட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களைப் பொறுபபு ஏற்பதற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லையென்று அவர் மேலும் கூறினார்.

சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்கள் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சமாதான பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் - விடுதலைப் புலிகளின் சமாதானம் தொடர்பான அர்ப்பணிப்பிலேயே இருப்பதாகவும், ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர்நாயகம் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சுகளை ஜனாதிபதி பறித்தது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்!

## லங்கா சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதில், சமாதான முயற்சி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும் என்று, லங்க சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

இனிவரக்கூடிய நிலைமை பற்றிய உணர்வுடன் சமாதான முயற்சியில் ஜனாதிபதி தீவிர பங்கேற்பது அவசியமென, தமது கட்சி பிரதமருக்கு அறிவித்துள்ளதாக கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்சமயம் இரு பிரதான அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறுவதே விரும்பத்தக்கது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சிசு உதான கணக்கிற்கு அன்பளிப்புப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 'சிசு உதான' சிறுவர் சேமிப்பு கணக்கிற்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி அன்பளிப்புப் பொருட்கள் கொழும்பில் இருந்து வரவுள்ளதாக - யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கும், ஏற்கனவே கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்குமே, இந்தப் பரிசுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன. தொப்பிகள், பாடசாலைப் பைகள், குடைகள், வோக்மன் ரேடியோக்கள் என்பனவே அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (ச)

# பொதுத்தேர்தலுடன் இணைந்ததாக மாகாணசபைகளுக்கும் தேர்தல்!

## ஜனாதிபதியின் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதய அரசியல் சூழ்நிலைகளால், அவசரமாக நாடாளுமன்றத் தேர்தல் நடாத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுமாக இருந்தால், அந்த நேரத்தில் நாடாளுமன்றத்துடன் சேர்ந்ததாக மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி எண்ணியுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸநாயக்க நாடாளுமன்றத்திற்கும், மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை, ஒரே நேரத்தில் நடாத்த தேர்தல் திணைக்களத்தால் இயலுமெனவும், ஆனாலும், இது தொடர்பில் பல சிரமங்களை தேர்தல் திணைக்களம் எதிர்நோக்க வேண்டி வருமெனவும் குறிப்பட்டார்.

தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு 65 கோடி ரூபா தேவைப்படும். இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடாத்தினால் சுமார் 45 கோடி ரூபாவை மீதப்படுத்தலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் திஸநாயக்கா தெரிவித்தார்.

# ஜனாதிபதி அமைச்சுகளை பொறுப்பேற்றதற்கு தேசியபிக்குமார் முன்னணி ஆதரவு தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிக்குகள் முன்னணி - ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களை பொறுப்பெடுத்துக்கொண்டதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தேசிய பிக்குகள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - ஐ.தே.மு. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டது. அது தெரிவுசெய்யப்பட்ட பின்னர், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பல தீர்மானங்களை எடுத்துள்ளது.

அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போதும், தேசிய பிக்குகள் முன்னணி எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கின்றது. நோர்வே கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளும் அதில் ஒன்று. இதனால், உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கததினால் - பொலிஸ் அதிகாரிகள் கடமையை நிறைவேற்றமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த நிலையில்தான், ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை நடந்துள்ளது. இந்த நடவடிக்கை குறித்து தேசிய சமாதான முன்னணி மகிழ்சிகொள்கிறது.

இதற்காக நாட்டின் தேசியப் பாதுகாப்பை முன்னேற்றுவதற்கு, ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகளுக்காக நாம் அவரைப் பாராட்டுகின்றோம். நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தும் அவருக்கு ஆதரவைத் தெரிவிப்பதில் இணைந்துகொள்கிறோம்.

இந்த நடவடிக்கைமூலம், நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை வெற்றிகரமாக முகங்கொடுக்கமுடியுமென நாம் நம்புகின்றோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டது தொடர்பாக

# ஊடகங்களில் வெளியான செய்திக்கு பிரதமரின் செயலர் வீரக்கோன் மறுப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள், காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக, ஊடகங்களில் வெளியான செய்திகளில் எதுவித உண்மையுமில்லை என, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நேற்று மதியமளவில் வெளியான இந்தச் செய்திபற்றி அவருடன் தொடர்புகொண்டு கேட்ட ஊடகவியலாளர்களிடமே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் அதிகளவில் சம்பந்தப்பட்ட பிரதான மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை- ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுள்ள நிலையில், தம்மால் பேசசுவாத்தைகளை உரியமுறையில் முனனெடுக்க முடியாது இருப்பதாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாகவும்-

இதன் அர்த்தம் - சமாதான முயற்சிகள் பிற்போடப்படும் என்பதல்ல எனவும், ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் குரல்தரவல்ல மற்றுமொரு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இத்தகைய ஒரு இக்கட்டான சூழ்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டுமென்றே பிரதமர் தெரிவித்ததாகவும், பேச்சுக்கள் பிற்போடப்பட வேண்டுமென்ற எண்ணம் பிரதமருக்கோ, ஐக்கிய தேசிய முன்னணிக்கோ கிடையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் உறுதியாக முன்னெடுக்கப்படுமென, நேற்றுமாலை கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

## மரக்கன்றுகள் அன்பளிப்பு

மில்க்வைற் சோப் நிறுவனத்தினால் வெற்றுப் பால்மா பைக்கற்றுகள் வழங்குவோருக்கு - மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. பயன்தரு மரக்கன்றுகளைப் பெறவிரும்புவோர் - வெற்றுப் பால்மா பைக்கற்றுக்களை, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மில்க்வைற் நிறுவனத்தில் கொடுத்து, மரக்கன்றுகளைப் பெறமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தென்னாசிய சதுரங்க போட்டியில் யாழ். வீரர் சிவோதயன்

அண்மையில் நடைபெற்ற உலக கிண்ணத்துக்கான தென்னாசிய சதுரங்க சுற்றுப்போட்டியில், யாழ். மாவட்ட வீரர் எஸ்.சிவோதயன் கலந்துகொண்டார். கடந்த வாரம் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் - இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சதுரங்க வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டிகளில் இலங்கையின் சார்பாகச் சிவோதயன் மட்டுமே கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், இவ்வாறான சதுரங்கப் போட்டியொன்றுக்கு இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

## பாம்புக் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

அண்மைக்காலமாக கிளிநொச்சியில் பாம்புக்கடிக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 20 இற்கு மேற்பட்டோர் பாம்புக் கடிக்கு இலக்காகி, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுள் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக - யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (122)

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

# படையினரால் கைதாகிய மகனை மீட்டுத்தருமாறு தந்தை முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணாமல்போன தனது மகனை மீட்டுத்தருமாறு, தந்தை ஒருவர் - மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். அரியாலையைச் சேர்ந்த வை.காளிமுத்து என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது எனது மகன் - 1996 ஆம் ஆண்டு, கல்வியங்காடு சந்தைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவருடன் மேலும் ஐந்து இளைஞர்களும் - படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள படைமுகாம் ஒன்றில் இவர்களைத் தடுத்த வைத்திருந்தபோது, அவர்களில் ஒருவர் தப்பியோடிவிட்டார். பின்னர் வன்னியில் என்னைச் சந்தித்த அவர், எனது மகன் படையினரால் கைது செய்யப்பட்ட விபரத்தைக் கூறினார்.

அதன் பின்னர், நான் வவுனியா சென்று, அங்குள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தேன். அவர்கள் மூலமாக எமக்கு எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

பின்னர், நான் கொழும்பு சென்று, அங்கிருந்து - வெலிக்கடை, பூசா, களுத்துறை, மகஸின் போன்ற சிறைக்கூடங்களுக்குச் சென்று, எனது மகனைத் தேடினேன். ஆனால், அவர் அங்கு இல்லை.

எனது மகனுக்கு என்னவாகியது என என்னால் அறியமுடியாதுள்ளது. அவர் இன்னும் உயிருடன் இருப்பதாகவே நான் நம்புகிறேன்.

எனவே, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து, தகுந்த பலனைப் பெற்றுத்தரும்படி கேட்டுக் கொள்கிறேன் என, இவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். காணாமல் போனவர் அகிலன் அல்லது நல்லப்பன் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இளைஞர் யுவதிகளுக்கு தொண்டர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூகநிறுவனங்களின் கூட்டமைப்பு எனும் அமைப்புமூலம் - இளைஞர், யுவதிகளுக்குத் தொண்டர் பயிற்சிநெறியொன்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளதாக நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில், சனசமூக நிலைய சமாசங்களின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட சனசமூக உறுப்பினர்களுக்கான செயலமர்வொன்றும் இந்த நிறுவன அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிகளில் கலந்துகொள்வோருக்கான உணவு, தங்குமிடவசதி, போக்குவரத்துச் செலவு என்பனவும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சிநெறிகளில் கலந்துகொள்ள விரும்பும் சனசமூக நிலைய உறுப்பினர்கள் - தத்தமது சமாசச் செயலாளர் அல்லது தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (44)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வு புலோலியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சமூகசெயற்பாட்டுமையம் - முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்றை எதிர்வரும் 15,16,ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளது. யு.என்.எச்.சி.ஆர். நிறுவன ஆதரவுடன், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் சிறுவர், பெண்கள் பாதுகாப்பை மேம்படுத்தல் எனும் விடயம் தொடர்பாகக் கருத்துக்கள் வழங்கப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கருத்தரங்கு, மாலைவரை நடைபெறுமெனவும், இதன்போது சிறுவர்கள் தேவைகளும், சிறுவர் உரிமைகளும், சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களது பிரச்சினை, பிரச்சினைக்குள்ளான பெண்களை இனங்காணல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

## புதிய காரியாலயம் திறப்பு

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்திற்கான காரியாலயம் பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தைக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்தக் காரியாலயத் திறப்பு விழாவின்போது, மறைந்த கலைஞர்களான நடிகமணி வி.வி.வைரமுத்து, பூந்தான் ஜோசப், சி.கணபதிப்பிள்ளை, வேலு.செல்வமணி ஆகியோரின் உருவப்படங்களும் - கழகச் செயலாளர் செ.மெற்றாஸ் மெயிலினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (ச)

## சூழல், கழிவுப்பொருள் முகாமைக்கான குழு

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் சூழல் மற்றும் கழிவுப் பொருள் முகாமைக்கான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழவில் 11 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். வலி. தெற்கு பிரதேசசபைச் செயலாளர் பி.விக்டர் தலைமையில்- உள்ளூராட்சி உதவியாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள், மகளிர் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் சுற்றுச்சூழலை பேணுதல், கழிவுகளை அகற்றுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாகப் பணியாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

## வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இருவர் இன்று யாழ் வருவர்

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு விவசாயத் திட்டத்தின் இணைப்பாளர் ஒருவரும், ஐரோப்பிய யூனியனின் தென்கிழக்காசிய நாடுகளுக்கான மனிதாபிமான உதவித் திட்டத்தின் தலைவரும் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இவர்கள் - யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் தம்மால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் முதலானவை குறித்தும், ஆராயவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### அரியாலைப் பகுதியில்

# போதியளவு மாணவர்கள் இன்மையால் இரண்டு பாடசாலைகள் மூடப்படும்நிலை

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பூம்புகார் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளும், போதியளவு மாணவர்கள் இன்மையால், மூடப்படும் அபாய நிலை தோன்றியுள்ளதாக இரு பாடசாலை அதிபர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக, இடம் பெயர்ந்த இந்தப் பாடசாலைகள் - தற்காலிகமாக அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்திலும், பின்னர் 2000 ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக - கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இயங்கிவந்தன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட சுமூக நிலையைத் தொடர்ந்து, இந்தப் பாடசாலைகள் அரியாலை - தபாற் கட்டைச் சந்தியில் இயங்கி வருகின்றன.

அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளினால், இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்து வசிப்பதால் இந்தப் பாடசாலைகளில் தொடர்ந்து கற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதிகளைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் - வேறு பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை அனுப்பிவிடுகின்றனர். இந்த நிலைமைகளால், இந்தப் பாடசாலைகளில் தற்போது மொத்தமாக 75 மாணவர்களே கல்வி கற்கின்றனர். இதனால், இந்தஇரு பாடசாலைகளும் விரைவில் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

போதியளவு ஆசிரியர்கள், தளபாடங்கள் இந்தப் பாடசாலைகளில் இருப்பதால் - அரியாலை கிழக்கு, பூம்புகார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் - தங்கள் பிள்ளைகளை இந்தப் பாடசாலைகளில் சேர்க்கவேண்டுமென அதிபர்கள் கேட்டுள்ளனர்.(55)



அளவெட்டி அருணோதயக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் - சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன், வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதனைப் படத்தில் காணலாம். (83)

# பூவரசம் தடி வாங்க வந்தவர் தலைக் கவசத்தைத் திருடினார்

பூவரசம் தடி வாங்கவந்த நபர், வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தைத் திருடிச் சென்றார். இந்தச் சம்பவம் அண்மையில் கந்தரோடை சின்னக்குளத்தடியில் நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - கடற்தொழிலுக்குப் பாவிப்பதற்கென பூவரசம் தடிவாங்குவதற்காக வீட்டுக்கு வந்த நபர் - வீட்டில் ஆள்நடமாட்டம் இல்லாததைக் கண்டு, அங்கிருந்த தலைக்கவசத்தைத் திருடிக்கொண்டு சென்றுள்ளார். அந்தவேளையில், கடைக்குச் சென்றுவிட்டு திரும்பிய வீட்டு உரிமையாளர்- தலைக்கவசத்தைத் திருடிச்சென்றவரைத் துரத்திச் சென்று, பொது மக்களின் உதவியுடன் மடக்கிப்பிடித்தார்.

பிடிக்கப்பட்ட திருடன், பின்னர் பொதுமக்களால் - கந்தரோடையில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டார். (101)

# மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அடுத்த வருடத்தில் இருந்து புதியவாய்ப்புக்கள்

அடுத்தவருட முற்பகுதியிலிருந்து மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளிக்கவுள்ளது. இதன் மூலமாகக் கடன் உதவிகள், வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கான இலவச விமான ரிக்கற்றுக்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வாடிக்கையாளருக்கு கிடைக்கவுள்ளது.

சிரேஷ்ட குடியிருப்பாளர்களான அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள், இரண்டு வருடத்தில் மீளப்பெறக் கூடிய நிலையான வைப்புக் கணக்குகளை ஏற்படுத்தமுடியும். இந்தக் கணக்குகளுக்கு 8 வீத வட்டி வழங்கப்படவுள்ளது. விவசாயிகளுக்குக் கடனுதவிகளை வழங்கும் புதிய திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன்களுக்கு மிகக் குறைந்த சதவீத வட்டியே அறவிடப்படவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக, தமது சேமிப்பு கணக்கிலோ அல்லது நிலையான வைப்புக் கணக்கிலோ ஒரு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட மீதியை உடையவர்களுக்கு, இலவச வெளிநாட்டு சுற்றுப்பயண வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

நாடளாவியரீதியில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு, இந்த வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இவர்கள தமது சுற்றுப்பயணத்தை திருப்பதி, புட்டபர்த்தி போன்ற சமய தலங்களுக்கு மேற்கொள்ளமுடியும். சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள விரும்பாத அதிர்ஷ்டசாலிகளுக்கு - ஐம்பதினாயிரம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

மேற்படி நடைமுறைகள்யாவும், அடுத்தவருட முற்பகுதியிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளதாக மக்கள் வங்கி தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது. (ச)

# கொக்குவிலுக்குச் சென்ற இளைஞன் இதுவரை வீட்டிற்கு திரும்பிவரவில்லை

கொக்குவில் பகுதிக்குச் செல்வதாகத் தெரிவித்துச் சென்ற மகன், வீடு திரும்பிவரவில்லையென, இவரது தாயாரால் - யாழ்.பொலிஸ்நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த த.சுசிதரன் (வயது-23) என்பவரே காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கடந்த 8 ஆம் திகதி கொக்குவில் பகுதியிலுள்ள தனது பெரியம்மா வீட்டிற்குச் செல்வதாகக்கூறிவிட்டுச்சென்ற இவரைக் காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான தகவலைப் பெற்றுத்தருமாறு இவரது தாயார் - பொலிஸ்நிலையத்தில் முறையிட்டுள்ளார்.(ஜெ)

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதரப்) பரீட்சைக்கான வழிகாட்டி

**வினாக்களுக்கு விடையளிக்கும் முறை**

1. வினாக்களைத் தெளிவாக வாசித்தல் வேண்டும்.
2. சரியான, விடைகளைத் தெரிவுசெய்து, வினாத்தாளில் குறிக்கவும்
3. விளக்கம் தெளிவில்லாத வினாக்களை இருதடவை வாசிக்கவும்.
4. வினாவொன்றில் கூடிய நேரத்தை எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
5. 40 வினாவிற்கும் கட்டாயம் விடை கீறவும்.
6. தெரிவு செய்த விடைகளைத் திருப்பி ஒருமுறை பார்க்கவும்.
7. புள்ளித்தாளில் தெளிவாகப் புள்ளடி இடவும்.
8. சரியான விடை இலக்கத்தைத் தெரிந்து, புள்ளடி இடுக.
9. புள்ளடித்தாளை புள்ளடி இட்ட பின் திருப்பி பார்த்தல்.

**பகுதி II கட்டுரை தெரிவு செய்தல்.**

1. இலகுவான கட்டுரையை தெரிவு செய்தல் நன்று.
2. தலைப்பு இடவேண்டும்.
3. 250 சொல்லுக்குக் குறைத்தல் கூடாது.
4. பந்தியமைப்பைக் கவனத்தில் கொள்ளவும்.
5. எடுத்துக்காட்டு, திருக்குறள், போன்றவைகள் தேவைப்படுமிடத்தில் சேர்க்கவும்.
6. 45 நிமிடத்தை கட்டுரைக்குப் பயன்படுத்தலாம்.

**சுருக்கம்**

1. பந்திகளை ஒன்று, இரண்டு தடவை வாசித்தல் வேண்டும்.
2. சுருக்கம் ஒன்றை எழுதிப் பார்க்கவும்.
3. சுருக்கத்தில் முறிவு ஏற்படாவண்ணம் திருத்தவும்.
4. சொந்த உரைநடையில் எழுதுதல் நன்று.
5. சொற்கள் அளவை கவனத்தில் எடுக்கவும். (இருசொல் குறையலாம் இரண்டு சொல் கூடலாம்).
6. சொற்களைச் சேர்த்து எழுதல் சிறந்தது. (25 நிமிடத்தை பயன்படுத்தவும்).

**கிரகித்தல் - வினா**

1. பந்தியை விளக்கத்துடன் தெளிவாக வாசிக்கவும்.
2. சரியான விடைகளைத் தெரிந்து, முழுவிடையாக எழுதல் வேண்டும்.
3. விடைகளை வினாத்தாளில் குறித்து எழுதலாம்.
4. பிழையின்றி எழுதல் குறிப்பிடத்தக்கது. (20 நிமிடத்தை பயன்படுத்தல் வேண்டும்).

**கடிதம் (தெரிவு 1 மட்டும்)**

1. முறைகளை அவதானித்தல் வேண்டும்.
2. உறவுமுறை, நண்பன் இவருக்கு எழுதும்போது வலது பக்கம் மட்டும் எழுதுபவர் விலாசம் எழுதல் முறையாக அமைக்கவும்.
3. அலுவலகத்திற்கு எழுதுபவர் விலாசத்துடன், இடது பக்கத்தில் அலுவல விலாசத்தை இடவும்.
4. அலுவலகம் என்றால், விடயத்தின் தலைப்பை எழுதி கீறி விடவும்.
5. இறுதியில் உறவு முறையாயின் - இங்ஙனம், இப்படிக்கு அன்புள்ள, என்று இடவும.
6. அலுவலகம் - அதிகாரியாயின் பணிவுள்ள, உண்மையுள்ள என எழுதவும். (15 நிமிடம் ஒதுக்கவும்) மிகுதியாகவுள்ள 10 நிமிடத்தையும், திருப்பி விடைகளைப் பார்த்தல், வினா இலக்கம் ஒழுங்காக போடல் போன்றவற்றுக்கு பயனபடுத்தவும்.

**பகுதி III (2 மணி)**

1. சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் வாசித்து எழுதவும்.
2. யார்,யாருக்கு, கேட்கப்பட்ட வினா இவற்றை எழுதி வாசிக்கவும்.
3. வினா இலக்கத்தைத் தெளிவாக ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதவும்.
4. யார், யாருக்கு என்பதை தடுமாற்றத்துடன் மாறி எழுதுவதை தவிர்த்துக்கொள்ளல்
5. வினா ஒன்றுக்கு விடையளித்த பின், அடுத்த வினாவை தொடரும் போது ஒரு வரிவிட்டு எழுதவும். (30 நிமிடம் பயன்படுத்தலாம்)

**II செய்யுள்**

1. செய்யுளை பிரித்து வாசித்து விளங்கிக் கொள்ளவும்.
2. வினா இலக்கத்தையும் பிரிவையும் போடவும். உதாரணம் -வினா இல.02. (அ)
3. பொருளை எழுதும்போது, சொந்தக் கருத்தில் முக்கிய விடயத்தை எடுத்துக் காட்டவும்.
4. சிறபபு அல்லது கேட்கப்படும் வினாவை அடுத்த வரியில் இவ் ★ அடையாளம் இட்டு எழுதவும்.
5. உவமானம், உவமேயம் பொதுத்தன்மை என்பவற்றை எடுத்துக்காட்டவும் (40 நிமிடம் செய்யுள்களுக்கு பயன்படுத்தவும்)

III 2,3,4, (1) வினாக்களில் எவையேனும் இரண்டை தெரிவு செய்து அ,ஆ,இ மூன்றுக்கும் விடை எழுதவும்.

2. உப வினா இலக்கத்தைத் தெளிவாக அடுத்த வரியில் போட்டு, விடை அழிக்கவும.
3. முக்கியகருத்தை வெளிப்படுத்தவும் (இரண்டு வினாவிற்கும் 25 நிமிடம் பயன்படுத்தவும்)

**தெரிவு வினா ஏதாவது ஒன்று மட்டும்**

1. அ,ஆ இரண்டிற்கும் விடையளித்தல் வேண்டும்.
2. இரண்டு வினாவும் (அ,ஆ) தொடர்புடையதாய் இருக்கும்.
3. விளக்கமாக விடையளித்தல் வேண்டும். (15 நிமிடம் பயன்படுத்தவும்)

முக்கியம் - மிகுதி 10 நிமிடத்தில் விடைகளைப் பார்த்தல், ஒழுங்கு படுத்தல் வேண்டும். புதிய வினாக்களை தொடங்கும்போது, புதிய விடைத்தாளில் தொடங்கவும்.

**எஸ்.சரவணபவன் Spl trd. Tamil - கொக்குவில் இந்துக்கல்லூரி**

# விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதரப்) பரீட்சைக்கான் முன்னோடி வினாத்தாள் - 2003

(29.10.2003 இல் வெளியான பகுதியின் தொடர்ச்சி....)

35. 2.35. மின்காந்த அலைகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது
    1. $3x10^{8}ms^{-1}$ எனும் வேகத்தில் பயணம் செய்யும்
    2. வெற்றிடத்தினூடாகவும் நேர்கோட்டில் பயணம் செய்யும்
    3. குறுக்கலை வடிவத்தில் ஊடுகடத்தப்படும்
    4. மேற்கூறிய அனைத்தும்
36. **Mg, Cu, Zn** ஆகிய உலோகங்களில் எதனைப் பெரசு சல்பேற்றுக்கரைசலுடன் சேர்க்கும்போது, செங்கபிலநிறப் படிவு கிடைக்கும்?
    1. **Mg** மாத்திரம் 2. **Mg** உம் **Zn** உம்
    3. **Mg** உம் **Cu** உம் 4. **Zn** உம் **Cu** உம்
37. இரும்பைப் பிரித்தெடுக்கும்போது ஊதுலையினுள்ளே சேர்க்கப்படும் மூலப்பொருளாக அமையாதது?
    1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி
    3. ஏமற்றைற்று 4. போக்சைற்று
38. வீட்டு மின்சுற்றில் பிரதான அம்சங்கள் தொடுக்கப்பட்டுள்ள திருத்தமான ஒழுங்கைச் சரியாக காட்டுவது?
    1. மின்மானி, சேவையுருகி, தலைமையாளி, இடதுஆளி, பரம்பற்பெட்டி
    2. சேவையுருகி, மின்மானி, தலைமையாளி, இடதுஆளி, பரம்பற்பெட்டி
    3. மின்மானி, சேவையுருகி, இடதுஆளி, தலைமையாளி, பரம்பற்பெட்டி
    4. சேவையுருகி, மின்மானி, இடதுஆளி, தலைமையாளி, பரம்பற்பெட்டி.
39. வாகனச்சாரதிகள் தமது வாகனத்துக்குப் பின்னால் பாதையின் இருமருங்கையும் பார்க்கப் பயன்படுத்தும் ஆடிவகை?
    1. தளவாடி 2. குழிவாடி
    3. குவிவாடி 4. பரவளைவு ஆடி
40. பின்வருவனவற்றுள் எது இறப்பர்பால் திரட்சியடைதலைத் தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும்?
    1. அமோனியாக்கரைசல் 2. சோடியம் இருகாபனைற்
    3. போமிக்கமிலம் 4. போமல்டிகைட்

## பகுதி 2

01) விவசாயத்துறையில் உயர்விளைச்சல், நோய் எதிர்ப்பு, வாழ்வுக் காலம்குறைத்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக விகாரம் பயன்படுகிறது. விகாரங்கள் கலப்புப் பிறப்பாக்கமுறையினாலும், பரம்பரை அலகுப்பொறியியல் நுட்பத்தின் மூலமாகவும் செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்றன. பெரிய பட்டாணிக்கடலை, பெரிய நிலக்கடலை போன்ற உயர்விளைச்சலைத்தரும் வகைகள் விகாரத்தினால் உண்டானவை. விகாரத்தின் மூலம் பரம்பரை அலகில் மாற்றம் உண்டாக்கி, தோற்ற அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் விளைவாகவே விதையில்லா தோடம்பழங்களும் சதுரமுகி உருவான பூசணிக்காய்களும் ஆகும். பரம்பரை அலகுப்பொறியியல் மூலம், உண்டாக்கப்படும் விகாரங்கள் சமூகத்திற்கு அனுகூலமாக இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் பிரதிகூலமாகவும் அமைந்து விடுகின்றது.

1. அ. விகாரம் என்ற பதத்தின் கருத்து யாது?
   ஆ. விகாரங்கள் இயற்கையாக ஏற்படுவதற்கான காரணங்களைத் தருக?
2. அ. அங்கிகளில் செயற்கையாக விகாரங்களை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நுட்பங்கள் எவை?
   ஆ. செயற்கையான விகாரங்களினால் பெறப்படும் அனுகூலங்களைத் தருக?
3. அ. கலப்புப்பிறப்பாக்கம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?
   ஆ. கலப்புப்பிறப்பாக்கச் செயன்முறை உண்டாக்கும் பிரதிகூலமான விளைவுகள் எவை?
4. அ. மனிதர்களில் ஒரு தலைமுறையிலிருந்து, இன்னொரு தலைமுறைக்கு ஊடுகடத்தப்படும் நோய்கள் எவை?
   ஆ. இரத்த உறவினரிடையே ஏற்படும் திருமணப்பந்தத்தால் உருவாகும் பிரதிகூலமான விளைவுகள் எவை?

(தொடரும்...)

**சற்குணநாதன் B.sc (Agri) Dip.in-Ed.**
**யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி**

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2003

பின்வரும் பந்தியைக் கவனமாக வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இலங்கையில் பெரிய ஆறு - மகாவலிகங்கை. அதன் கரையில் ஒரு சிறுகுடிசை இருந்தது. அந்தக் குடிசையில் மா அரைத்து வாழ்க்கை நடத்தும் வீரன் என்னும் பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் நற்குணமும், நற்செயலும் உடையவன். ஒருநாள் அவன் வேலை செய்யும்போது, நான் ஒருவரோடும் பொறாமை கொள்ளேன். என் மீதும் ஒருவரும் பொறாமை கொள்ளார். எனக்குக் கடன்தொல்லை இல்லை, கவலை இல்லை, நோய் இல்லை. என் மனைவியோடும், பிள்ளைகளோடும் ஒற்றுமையாக வாழ்வேன் என்று சொல்லி, இன்பமாகப் பாடினான்.

அதனைக்கேட்ட இலங்கை அரசன் ஒருவன் - அவன் அருகில் வந்து, "இலங்கை அரசனாகிய நான், உன் மேற் பொறாமை கொள்கிறேன். உன்னைப்போல் மகிழ்ச்சியும், ஆறுதலும் எனக்கில்லை. நீ கவலை எதுவும் இல்லாமல் இன்பமாக இருக்கும் இரகசியத்தை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். வீரனும் அந்த உண்மையை விரித்துரைத்தான். மன்னனும் "சிந்தையின் நிறைவே குறையாத செல்வம்" என்பதை அறிந்து, அவனைப் பாராட்டிச் சென்றான்.

(1) இலங்கையின் பெரிய ஆறு எது? ..........

(2) சிறு குடிசை எங்கே இருந்தது? ..........

(3) வீரன் எவ்வாறு தனது வாழ்க்கையை நடத்துகின்றான்? ..........

(4) இலங்கை அரசன் யார்? ..........

ஒத்தகருத்துள்ள சொல் தருக.

(5) மகிழ்ச்சி .......... (6) ஆறு..........

எதிர்கருத்துள்ள சொல் தருக.

(7) பெரிய.......... (8) இல்லை..........

எதிர்ப்பால் சொல்லை எழுதுக.

(9) வீரன் .......... (10) மனைவி ..........

(11) "கொள்கிறேன்" என்பதன் இறந்தகாலம் எது? ..........

(12) "வீரன் அந்த உண்மையை விரித்துரைத்தான்" என்ற வாக்கியத்தின் பயனிலை யாது? ..........

(13) இந்தப் பந்தியிலுள்ள பழமொழி யாது? ..........

(14) இந்தப் பந்தியிலுள்ள பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக? ..........

(15) இந்தப் பந்தியிலுள்ள வினைச்சொல் ஒன்றினை எழுதுக? ..........

(16) இலங்கையிலே பெரிய ஆறு மாகாவலி கங்கை ஆகும். இதிலுள்ள எழுவாய் அடைமொழி எது? ..........

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை இல. 17 முதல் 21 வரை (ஆங்கில எழுத்தில்) எழுதுக.

(17) இலங்கை..........
(18) அரசன்..........
(19) மனைவி..........
(20) நீலம்..........
(21) தந்தை..........

கீழே தரப்பட்டுள்ள இல. 22 முதல் 26 வரையுள்ள உருக்களின் பெயர்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(22) STOP .......... (23) .......... (24) ..........

(25) .......... (26) ..........

இல. 27 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(27) நிழற்றப்பட்ட பகுதியின் பின்னம் என்ன? ..........

(28) 8796 என்பதைச் சொற்களில் எழுதுக? ..........

(29) XLVII என்பதை இந்து அராபிய எண்ணில் எழுதுக. ..........

(30) கோலத்தை இனங்கண்டு, வெற்றுக்கூட்டில் பொருத்தமான எண்ணை எழுதுக.
160, 80, 40, ☐, ☐

(31) பி.ப 1.25 மணியை, 24 மணிக்கடிகாரத்தில் தருக. ..........

(32) $\frac{3}{8} + \frac{2}{8} =$ ..........

(33)

| kg | g |
|---|---|
| 14 | 250 |
| 4 | 650 |
| 12 | 400 |

(34) 1 kg சீனியின் விலை ரூபா 32.00 எனின், 250 g சீனியின் விலையென்ன? ..........

(35) ஒரு பாத்திரத்தில் 5 / 350ml வண்ணப்பூச்சு உள்ளது. அதிலிருந்து 1 / 800ml சுவரில் பூசப்பட்டது. மீதியாகவுள்ள வண்ணப்பூச்சின் அளவு யாது? ..........

(36) பின்வரும் விலைப்பட்டியலைப் பார்த்து, கீழ்வரும் வினாவுக்கு விடை தருக.

| பொருள் | விலை |
|---|---|
| 1 kg மா | 18.00 |
| 500 g தேயிலை | 125.00 |
| 1 சவர்க்காரம் | 12.00 |
| 1 / பால் | 40.00 |

(37) 2kg மாவினதும் 1.5 / பாலினதும் விலை யாது? ..........

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் கருத்தை இல. 38-42 வரையுள்ள வினாக்களுக்கு தமிழில் எழுதுக.

(38) TEMPLE ..........
(39) SATURDAY..........
(40) DOCTOR..........
(41) GREEN..........
(42) GROUND..........

கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படித்து, அதன் கீழுள்ள இல. 43 முதல் 52 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> "பாட்டியின் வீட்டுப் பழம் பானை ~ அந்தப்
> பானையின் ஒரு புறம் ஓட்டையடா,
> ஓட்டை வழியொரு சுண்டெலியும் ~ அதன்
> உள்ளே புகுந்து நெல் தின்றதடா!"

(43) பழம் பானை யாருடையது?
…………………………………

(44) ஓட்டை வழியே புகுந்தது எது?
…………………………………

(45) அது எதைத் தின்றது?
…………………………………

(46) பாட்டி என்பதன் எதிர்பாற் சொல் எழுதுக?
…………………………………

(47) வீடு என்பதன் ஒத்தசொல் தருக?
…………………………………

(48) "ஓட்டையடா" என்பதைப் பிரித்தெழுதுக?
…………………………………

(49) "உள்ளே" என்பதற்கு எதிர்கருத்துள்ள சொல்லை எழுதுக?
…………………………………

(50) பாளை எதனால் செய்யப்படுகிறது?
…………………………………

(51) இந்தப் பாடலில் காணப்படும் தானியம் எது?
…………………………………

(52) வீடு + பழம் என்பதைச் சேர்த்து எழுதுக?
…………………………………

இல. 53 முதல் 62 வரையுள்ள வினாக்களில், தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் "சரி" எனவும், பிழையாயின் "பிழை" எனவும், கூற்றின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(53) வெண்டி செடிவகையைச் சார்ந்தது. ( )
(54) பூக்கள் அழகைத் தருகின்றன. ( )
(55) பூனை ஒரு வீட்டுப்பிராணி ஆகும். ( )
(56) இலங்கையின் தேசியபறவை காட்டுக்கோழிச்சேவல் ஆகும். ( )
(57) நாதஸ்வரம் ஒரு துளைக்கருவி ஆகும். ( )
(58) எமது அடிப்படைத் தேவைகளில் உணவு ஒன்றல்ல. ( )
(59) நமது நாட்டில் முஸ்லிம் இனமக்களும் வாழ்கின்றனர். ( )
(60) வீதி விபத்தில் இருந்து தப்புவதற்கு வீதி விதிகளைக் கடைப்பிடிக்கவேண்டும். ( )
(61) நீரினால் பரவும் நோய்களில் ஒன்று வயிற்றோட்டம். ( )
(62) இலங்கையின் இயற்கைத்துறைமுகம் கொழும்பு ஆகும். ( )

இல. 63 தொடக்கம் 68 வரையுள்ள வாக்கியங்களில் பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக.

(63) உலகின் மிகப்பெரிய கண்டம் எது?
1. ஐரோப்பா 2. ஆசியா 3. வடஅமெரிக்கா 3. ஆபிரிக்கா

(64) எல்லா உயிர்ச்சத்துக்களும் அடங்கிய பழங்களில் ஒன்று?
1. பலாப்பழம் 2. பப்பாசிப்பழம் 3. நாவற்பழம் 4. தோடம்பழம்.

(65) முள்முருங்கைப்பூ பூக்கும் காலம்?
1. சித்திரை 2. வைகாசி 3. மாசி 4. கார்த்திகை

(66) பாடசாலையில் கிடைக்கக்கூடியது?
1. பாடநூல் 2. சீருடை 3. கல்வி 4. பணம்

(67) இலங்கையில் ஓவியக்கலை வளர்ச்சியின் மேம்பாட்டை உணர்த்தும் இடம் எது?
1. கொழும்பு 2. சிகிரியா 3. கண்டி 4. நுவரெலியா

(68) பின்வரும் வாக்கியங்களை வாசித்து, நிகழ்ச்சிகள் நடக்கின்ற வரிசைக்கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. கூனியின் செய்கையால் கைகேயி மனம் மாறினாள்.
2. இராமனுக்கு முடிசூட்டு வைபவம் நடைபெறப்போவதை அறிந்தாள்.
3. இராமனின் பிரிவைத் தாங்காது தந்தை உயிர் நீத்தார்.
4. இராமன் காட்டிற்குச் சென்றான்.
5. கைகேயின் மகன் இராமன்.

1. 2,3,1,4,5 2. 5,2,1,4,3 3. 3,4,2,1,5

கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, இல 69 முதல் 72 வரையான வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தெரிந்து, விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

> *மரங்கள் தோறும் கிளைகள் தோறும்*
> *மகிழ்ந்து தாவுதாம்- அவை*
> *மமதையாகச் சேட்டை செய்தே*
> *பல்லை இளிக்குதாம்*

(69) மரக்கிளைகள் தோறும் தாவுவது எது?
1. குரங்கு 2. அணில் 3. பாம்பு

(70) மமதை என்பதன் ஒத்தசொல்?
1. சேட்டை 2. துன்பம் 3. அதிகாரம்.

(71) மகிழ்ந்து என்பதன் எதிர்ச்சொல்?
1. சந்தோசம் 2. துன்பம் 3. இன்பம்

(72) பல் என்பதன் பன்மைச்சொல்?
1. பல்கள் 2. பல்லுகள் 3. பற்கள்

கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும், எழுத்துக்களினதும் நிரையை வாசியுங்கள். இதைக்கொண்டு இல. 73 தொடக்கம் 77 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

**33LL94m, PN97, OR 666LLL, 38NNLL, 38 NQ993N.**

(73) இதிலுள்ள ஆங்கில எழுத்துக்களை வரிசையில் எழுதினால்.
1. P,R,O,L,N,M,Q 2. L,M,N,O,P,Q,R, 3. N,O,P,Q,R,L,M

(74) இதில் கூடிய தடவை காணப்படுவது எது?
1. எழுத்து N 2. இலக்கம் 3 3. எழுத்து L

(75) அடுத்துவரும் இரு எண்களைக் கூட்டும்போது வரும் விடை?
1. 106 2. 191 3. 13C

(76) 49 ஐ உரோம எண் குறியில் எழுதுக.?
…………………………………

(77) 1 5/10 ஐ தசமதானத்தில் எழுதுக?
…………………………………

பின்வரும் எண்சட்டங்களைக் கூட்டி அமையும் விடையைக் குறிக்குக.

(78) ஆ நூ ப ஒ + ஆ நூ ப ஒ = ஆ நூ ப ஒ

(79) 1டசின் பென்சில்களின் விலை ரூபா 144 எனின், 9 பென்சில்களின் விலை யாது?
…………………………………

பின்வரும் சொற்களை முதல் எழுத்துக்களின் வரிசைப்படி ஒழுங்குபடுத்தி எழுதுக?

(80) பூமி, பொழுது, பந்து, பைகை, பாதகம், புளிதம், பீடை, பேசும், பெருமை, பௌதீகம், போது, பிறந்தது.
…………………………………

(81) "சத்தம் சுகம் தரும்" எனும் தலைப்பின் கீழ் 6 வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம்பெறுவதுடன், அந்த வாக்கியங்களின் எழுவாய், பயனிலையையும் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்).
(1). …………………………………
(2). …………………………………
(3). …………………………………
(4). …………………………………
(5). …………………………………
(6). …………………………………

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்



# கணிதம் II

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மாதிரிப்பரீட்சை

நா.கேதீஸ்வரன் ஆசிரியர்
Spl.Trd (MATHS)
யாழ். வரணி மகா வித்தியாலயம்.

1) a) மாம்பழம் ஒன்றின் விலை இரண்டு ரூபாவால் குறைந்திருந்தால், 120 ரூபாவிற்கு 5 மாம்பழங்கள் கூடுதலாக வாங்கமுடியும்.
1. மாம்பழம் ஒன்றின் முன்னைய விலை ரூபா x எனின், 120 ரூபாவிற்கு வாங்கக்கூடிய மாம்பழங்களின் எண்ணிக்கையைக் காண்க.
2. இரண்டு ரூபாவால் விலை குறைந்த பின் வாங்கக்கூடிய மாம்பழங்களின் எண்ணிக்கையைக் காண்க.
3. மேலே பெறப்பட்ட இரு கோவைகளையும் பாவித்து, சமன்பாடொன்றை உருவாக்குக.
4. அச்சமன்பாட்டைத் தீர்த்து, முன்னைய விலையில் வாங்கக் கூடிய மாம்பழங்களின் எண்ணிக்கையைக் காண்க.

b)
1. தீர்க்குக.
$3a = 15$
$a+b+c = 7$
$2a + 2b - c = 5$

2. $a^3 - b^3 = (a - b)(a^2 + ab + b^2)$ எனும் விரிவைப் பயன்படுத்தி $8p^3 - 1$ காரணி காண்க.

c) வரிப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் DE//BC
1. $\frac{AD}{AB}$ இற்குச் சமமான ஒரு விகிதத்தை முக்கோணியின் பக்கங்களிற் கூறுக.
2. $\frac{AD}{AB}$ இன் பெறுமானத்தைக் காண்க.

A, D, E, B, C; 10cm; 15cm

d) உருவில் காட்டப்பட்டுள்ள திண்மக் கூம்பு ABE இலிருந்து CDE எனும் சிறு கூம்புப்பகுதி வெட்டியகற்றப்படுகிறது.
1. கூம்பு ABE இன் கனவளவைக் காண்க.
2. கூம்பு CDE இன் கனவளவைக் காண்க.
3. எஞ்சியபகுதி ABDC இன் கனவளவைக் காண்க.

A, B, C, D, E; 21cm; 27cm; 9cm

c) கீழேயுள்ள தண்டு, இலை வரைபைக் கொண்டு விடை தருக.

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 3, 8, 9 |
| 1 | 2, 5, 7, 8, 9,9 |
| 2 | 8, 9, 9, 9 |
| 3 | 4, 5, 5, 6, 7, 8, 9, 9 |
| 4 | 3, 6, 7, 7, 8, 9,9 |
| 5 | 0 |

a) பரம்பலின் ஆகாரம் யாது?
b) இடையம் யாது?
c) காலனை இடைவீச்சு யாது?

f) $\xi = \{1, 2, 3, \ldots\ldots 10\}$
$p = \{y:y$ ஒரு முக்கோணி எண்$\}$
$Q = \{y:y$ என்பது 2 இன் ஒரு மடங்கு$\}$
1. P,Q என்ற தொடைகளின் மூலகங்களை எழுதுக.
2. தொடை $P \cap Q$ இன் மூலகங்களை எழுதுக.
3. $n(p' \cap Q')$ ஐ காண்க.

2) அ) தவம் என்பவர் 10 ரூபா பெறுமதியுள்ள பங்குகளை 15, ரூபாப்படி கொள்வனவு செய்ய, 36,000 ரூபா முதலீடு செய்து, இலாபமாக 4,320 ரூபாவைப் பெற்றார்.
1. தவம் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
2. பங்குகளின் பெயர்மாத்திரைப் பெறுமதி யாது?
3. வழங்கப்படும் பங்குஇலாப வீதம் என்ன?

ஆ) ரூபா 7,500 பெறுமதி உடைமின் உபகரணம் ஒன்றை வாடகைக் கொள்வனவுத் திட்டத்தில் கொள்வனவு செய்யும் ஒருவர், முதலில் 4,500 ரூபாவை செலுத்தி, எஞ்சிய தொகையை 5% மாத வட்டிவீதத்தில் 15 தவணைகளில் செலுத்தி முடிப்பதாகப் பொருளைக் கொள்வனவு செய்கிறார்.
1. ஒரு மாதத்திற்கு கட்டவேண்டிய கடன் பகுதி எவ்வளவு?
2. செலுத்தப்படும் மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
3. செலுத்தப்படும் மொத்த வட்டி எவ்வளவு?

3) சார்பு $y = x^2 - 2x - 2$ எனும் வரைபை வரைவதற்குப் பொருத்தமான xy ஆகியவற்றின் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணையொன்று தரப்பட்டுள்ளது.

| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 6 | 1 | ….. | ….. | ….. | 1 | 6 |

a) மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.
b) x அச்சுவழியேயும் y அச்சு வழியேயும் 10 சிறு பிரிவுகளை ஒரு அலகாகக் கொண்டு வரைபை வரைக.
1. இழிவுப்பெறுமானம் யாது?
2. சமச்சீர் அச்சை வரைந்து அதன் சமன்பாட்டை எழுதுக.
3. சார்பு நேராக இருக்கும் x இன் பெறுமான வச்சைக் காண்க.
4. $x^2 - 3x - 2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலகங்களைக் காண்க.

4) அ) படத்தில் 30 cm பக்கமுடைய சதுர அடியைக் கொண்ட கூம்பகவடிவ பிரமிட் காட்டப்பட்டுள்ளது. x என்பது முக்கோண பக்கத்திற்கு வரையப்பட்ட செங்குத்துத்தூரம் ஆகும். பிரமிட்டின் உயரம் 20 cm
1. x இன்பெறுமதி யாது?
2. பிரமிட்டின் மொத்த மேற்பரப்பளவைக் காண்க.
3. பிரமிட்டின் கனவளவைக் காண்க.
(கூம்பக கனவளவு $= 1/3$ x அடிப்பரப்பளவு x உயரம்)

30 cm

ஆ) மேற்படி பிரமிட் உலோகம் உருவாக்கப்பட்டு 1 g $40.0 cm^3$ பெறுப்பட்டு ஆரை 2.1cm உடைய எத்தனை உலோகக் கோளங்களை உருவாக்கலாம்.
(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்*
*இன்னா அறிவி னவர்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ஊடக சுதந்திரமும் தேசிய பாதுகாப்பும்

அரச வெகுஜன ஊடகங்கள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபின்னர் - அவற்றின் குரலும், கோஷமும் அடுத்த நாளே மாறிவிட்டது.

நேற்றுவரை ஐ.தே.முன்னணி அரசு குறித்தும், பிரதமர் பற்றியும், சமாதான நகர்வுகள் சம்பந்தமாகவும் சகல விதத்திலும் சார்பு நிலையில் கருத்துப் பிரசாரம் செய்துவந்த இந்த ஊடகங்கள் அனைத்தும், எவ்வளவு வேகமாக ஜனாதிபதி புராணம் பாட ஆரம்பித்துள்ளன என்பதை நினைக்கும்போது, சிறிலங்காவின் ஊடக சுதந்திரம் என்பது எத்தகைய பரிதாபமான நிலைக்குள்ளாகியுள்ளதென்பது தெரியவரும்.

சிறிலங்காவுக்கு இது ஒன்றும் புதுமையான அனுபவமல்ல. இது அதன் ஜனநாயக பண்பாடு(!) களில் ஒன்றாகவே மாறிவிட்டது.

ஒவ்வொரு முறையும் ஆட்சிமாற்றம் - அதிகார பீடங்களில் மாற்றம் ஏற்படும்போதெல்லாம் இதுதான் நடந்துவருகிறது.

பொதுமக்கள் தான் பாவம், இப்படியான கருத்துநிலை மாற்றம் திடீர் திடீரென ஏற்படும்போதெல்லாம், பொதுமக்களே மனக்குழப்பம் மற்றும் கருத்தியல் குழப்பங்களுக்கு உள்ளாகி விடுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலைகளில் அரச ஊடகங்கள் அனைத்திலும் பணியாற்றும் - பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஒலிபரப்பாளர்கள் மற்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் அனைவரும் அசாதாரணமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

நேற்றுவரை பச்சை மை தொட்டு எழுதிய பேனை, நீலமை தொட்டு எழுதவேண்டிய நிலைக்குள்ளாகிவிடுகின்றது.

நேற்றுவரை வலியுறுத்தி - நம்பிக்கையூட்டி - அமைதிகலந்த வார்த்தைகளால் எழுதியும், பேசியும் வந்த சமாதானம் பற்றிய கருத்துகள், இன்று அதற்கு முரணான நிலையை பற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக நேரிட்டுவிடுகிறது.

ஊடகங்கள் குழம்பினால், உலகம் குழம்பும் என்ற யாரோ ஒருவரின் வார்த்தைகள்தான் நினைவுக்கு வருகின்றன.

அரசியல்வாதிகளிடையேயான அதிகாரப்போட்டிகள், கௌரவப் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு, ஊடகவியலாளர்களை தமக்குள்ள அதிகார வலுவைப் பயன்படுத்தி, அழுத்தங்களுக்குள்ளாக்கி, சுயாதீனமாக தமது கருத்துக்களை நடுநிலை நின்று தெரிவிப்பதற்கான அவர்களின் உரிமைகளை நிராகரிக்கும் அணுகுமுறைகளை, சிறிலங்காவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் ஒவ்வொரு கட்சியும், தவறாது மேற்கொணடே வந்துள்ளன.

இது அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறல் நடவடிக்கையேயாகும்.

ஆனாலும், எதிர்காலத்தில் எவன் ஊடகங்களை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு இயங்குகிறானோ, அவனே சகல விதத்திலும் சர்வ வல்லமைகொண்ட பலவானாக விளங்குவான் என்ற, நவீன இலத்திரனியல் உலக கோட்பாட்டை சிறிலங்காவின் அதிகாரபீடத்தவர் நன்கு உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது.

இருந்தபோதிலும், ஊடகங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்ளக் கையாளும் வழிமுறைகள், ஒரு வகையான ஜனநாயகத்திற்கெதிரான அச்சுறுத்தல்கள் என்பதே உண்மை.

ஒரு நாட்டின் அரசியல் சமூகவியல் தொடர்பான இயங்கு நிலையின் இயல்புத்தன்மையை , மனித உரிமைகளின் அடிப்படையிலான செயற்பாட்டை மறைமுகமாக, அதேசமயம் முற்றாக நிராகரிக்கும் தன்மை கொண்டதாகவே இந்த வழிமுறைகள் காலத்திற்குக்காலம் அவரவர் தேவைகளை சுய அரசியல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு ஆளும் அதிகார வர்க்கத்தினரால் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்டும் வந்துள்ளது.

ஊடகங்களுக்கான செய்தித்தணிக்கையை அதிக தடவைகள், அதி நீண்ட காலத்திற்கு அமுல் செய்துவைத்திருந்த நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று.

'பாதுகாப்புக் காரணங்களுக்காக' - என ஓரிரு வார்த்தைகளிலேயே காரணங்களைக் கூறிக்கொண்டு, தற்போது நிறுத்தப்பட்டுள்ள போர் நடவடிக்கைகளை தீவிரமுனைப்புடன் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டிருந்த காலத்தில், ஊடகங்களுக்கான செய்தித்தணிக்கையை சிறிலங்கா அரசு மிக நீண்ட காலம் நடைமுறைப்படுத்தி வந்த காலத்திலேயே அரச பயங்கரவாதம் கட்டுமீறி தன் அராஜக நடவடிக்கைகளை விஸ்தரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று விசாரணைகளுக்கும், கண்டனங்களுக்கும் உள்ளாகிவரும் படைத்தரப்பினரின் கொடூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் யாவும், அவசரகால நிலைமைகளின் கீழான ஊடகங்களுக்கான செய்தித்தணிக்கை காலங்களிலேயே மேற்கொள்ளப்பட்டவையாகும்.


இராணுவ நகர்வுகளின்போது, அவர்களால் கைப்பற்றப்படும் பிரதேங்களில் - தமது கட்டுப்பாட்டுக்குள் வரும் பிரதேசங்களில் வாழும் மக்களின் அறிவையும், மனதையும் வெல்லும் நடவடிக்கை என்ற நாகரிகப் பெயரிலான உளவியல் நடவடிக்கைகள் யாவும், இந்த மாதிரியான ஊடகச் செய்தித்தணிக்கை நிலையின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று முகிழந்து வந்துகொண்டிருந்த சமாதான சூழலில் மீண்டும் ஊடகச் சுதந்திர இயக்கத்திற்கான அச்சுறுத்தல் வருமோ என்ற அச்சம், ஜனாதிபதி ஊடக அமைச்சுப் பொறுப்பை அபகரித்ததைத் தொடர்ந்து உருவாகத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தில் - பல ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளின் தாக்கம் இன்னமும் மறையவில்லை என்பதே உண்மை.

தேசத்தின் பாதுகாப்பு என்பதை, மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிப்பதன் மூலம் ஒருபோதும் உத்தரவாதப்படுத்த முடியாது என்பதை, கடந்தகால அனுபவங்களில் இருந்து அதிகார பீடத்தவர்கள் உணர்ந்துகொள்வது காலத்தின் அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி:- நாட்டின் நிலைமை குறித்துக் கலந்துரையாட பிரதமருக்கு, ஜனாதிபதி அழைப்பு

# சகல தரப்பினருடனும் நெருக்கமான உறவுகளைப் பேணுவது அவசியம்

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் தெரிவிப்பு

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லும் முன்னர், சகல தரப்பினருடனும் நெருக்கமான உறவுகளைப் பேணுவது அவசியம் என்று, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய நிலமை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்து ஆராய முன்னர், கருத்துக்கள் எதனையும் வெளியிடமுடியாது என்றும் அவர் கூறினார்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து தனியார் வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே, அவர் இந்தக் கருத்துக்களைக் கூறினார்.

சென்னையிலிருந்து நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர், ஒரு சில தினங்களுக்கு இலங்கையில் தங்கியிருப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வந்துள்ள இவர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் இன்று சந்திக்கவுள்ளனர்.

இந்தச்சந்திப்பின்போது, இலங்கையின் அரசியல் நிலமை குறித்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை இன்றையதினம், நோர்வே பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகளையும், மதத் தலைவர்களையும் இன்றைய தினம் சந்தித்துப் பேசுவார்கள் என்று நோர்வேத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வேயின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று, விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படைக்கு புதிய பயிற்சிகளை வழங்க அமெரிக்க கடற்படை அதிகாரிகள் வருகை

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி வழங்கவென, அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த 20 கடற்படை அதிகாரிகள் விரைவில் கொழும்பு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடற்படையினருக்கு சிறிய படகுகள் தொடர்பான பயிற்சிகளையும், கடற்போர் தொடர்பான மேலதிக பயிற்சிகளையும், இந்த அமெரிக்கக் கடற்படைக்குழு வழங் கவுள்ளது.

இருநாட்டுக் கடற்படைகளுக்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு அடிப்படையிலேயே, இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

# நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து பொலிஸ் அதிகாரிகளுடன் ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - 250 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், அனைத்துப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் ஜனாதிபதி - குழு வன்முறை, அரசியல் வன்முறை மற்றும் சட்ட ஒழுங்கைப்பேணுதல் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் நாடு திரும்பியபோது, ஐக்கிய தேசியக் கட்சியினர் வரவேற்பு வழங்கியபோது, பொலிஸ் பாதுகாப்பு வழங்கியமை தொடர்பாக ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ்மா அதிபர் - பிரதமரின் பாதுகாப்புப்பிரிவு கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, விசேட அதிரடிப்படையினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக, ஜனாதிபதி - விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி நிமால் லேகேயிடம் - கடமைகளில் பொலிஸ் கொமாண்டோக்களை ஈடுபடுத்த முடியுமா எனக் கேட்டதற்கு, தேவைப்படின் அதனை வழங்கத் தயாராக இருப் பதாகத் தெரிவித்தார்.

பிரதமரை வரவேற்கும் நிகழ்வில், பொலிஸாருக்குத் துணை யாகப் பொலிஸ் கொமாண்டோக்கள் ஈடுபட்டதற்கு, ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

நேற்றுமாலை 3 மணியளவில் நடந்த இந்தச் சந்திப்பில், பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்தைச் சேர்ந்தோர் தமது பதவியுயர்வுகள் தாமதமடைவதைச் சுட்டிக்காட்டினர்.

தற்போது நிலவிவரும் சமாதான சூழ்நிலைகளுக்குப் பங்கம் ஏற்படாதவாறும், நாட்டின் பாதுகாப்புக்கு எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் ஜனாதிபதி வழங்கினார்.

மேலும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களின் சம்பள அதிகரிப்பு பற்றியும், அவர்களுடைய பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு என சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் அங்கு அவர் விளக்கமளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்தோரில் 30 வீதமானோரே மீளக்குடியேறியுள்ளனர்

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியல், தீவுப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து, இடம்பெயர்ந்திருந்த மக்களில் 30 வீதத்திற்குக் குறைவான தொகையினரே மீளக்குடியமர்ந்துள்ளனர்.

குறிப்பாக, தீவகத்தின் தெற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில், 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 52 ஆயிரத்து எழுநூறு குடியிருப்பாளர்கள் வசித்து வந்தபோதும், தற்போது சுமார் 16 ஆயிரம் குடியிருப்பாளர்களே மீளக்குடியமர்ந்துள்ளனர். மண்டைதீவுப் பகுதியில் குறித்த காலப்பகுதியில் ஐயாயிரத்து முப்பது குடியிருப்பாளர்கள் வசித்தபோதிலும், தற்போதைய சமாதான சூழலில் சுமார் ஆயிரத்து 131 குடியிருப்பாளர்களே மீளக்குடியமர்ந்துள்ளார்கள்.

அத்துடன், புங்குடுதீவுப் பகுதியில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தபோதும், இதுவரை 4 ஆயிரத்திற்கும் குறைவான குடியிருப்பாளர்களே மீள்குடியமர்ந்துள்ளனர். இதேவேளை - அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, மற்றும் சரவணை பகுதிகளில் வசித்து வந்த 22 ஆயிரத்து அறுநூற்றிக்குமதிகமான குடியிருப்பாளர்களில், இதுவரை சுமார் எட்டாயிரம் குடியிருப்பாளர்களே மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இப்பகுதிகளில் தொடரும் இராணுவ சூழல், குறிப்பிட்ட சில பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு, மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமை என்பவையே, மக்கள் மீள் குடியமர பின்னடிப்பதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், கணிசமான இடம்பெயர்ந்த குடும்பங்கள் - யாழ் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றன. (202)

# ஜனாதிபதியின் தேசிய அரசமைப்பு சாத்தியப்படக்கூடிய விடயமா?

நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் கொண்ட தேசிய அரசாங்கம் அமைக்கலாம் என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாட்டு மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சிகள் மூலம் ஜனாதிபதி உரைநிகழ்த்திய போது, இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

ஊடகத்துறை அமைச்சைத் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டுவந்தபின், நாட்டு மக்களுக்கு ஊடகங்கள்மூலம் இரண்டாவது தடவையாகவும் உரைநிகழ்த்துகையில், ஜனாதிபதி சந்திரிகா தேசிய அரசு அமைக்கும் யோசனையை முன்வைத்திருக்கிறார்.

மூன்று அமைச்சுகளையும் பதவி நீக்கம் செய்து, நாடாளுமன்றக் கூட்டத்தை ரத்துச் செய்து, தமது நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தி அதிரடி நடவடிக்கை எடுத்த சந்திரிகா அம்மையார், தாம் எடுத்த நடவடிக்கையின் விளைவுகளைச் சமாளிப்பதற்காகத்தான் இந்தத் தேசிய அரசு யோசனையை வெளியிட்டு- மக்களையும், உலகையும் திசைதிருப்பப் பார்க்கிறார். உண்மையிலேயே நாட்டின் பிரச்சினைகளுக்கு, கட்சி அடிப்படைகளை விடுத்து, அனைவரும் தேசிய அளவில் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கு இருந்தால், எப்போதோ சகல அரசியல் தலைவர்களையும்



அழைத்து ஆலோசனை நடத்தியிருப்பார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும். இதற்காக மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியுடன் பொ.ஐ.முன்னணி பேச்சு நடத்திவருகிறது. ரணில் அரசு எந்தநேரமும் ஜனாதிபதியால் கலைக்கப்படலாம். இந்த அரசாங்கத்தை கலைத்துவிட்டு, வெகுவிரைவில் புதிய அரசு ஆட்சிக்குவரும்.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலைத் துறைமுகத்திற்கும் - அதனால் இந்தியாவுக்கும் ஆபத்து.

புலிகள் படைகளைப் பலப்படுத்தி வருகின்றனர். திருகோணமலைத் துறைமுகத்தையும், எண்ணெய்க் குதங்களையும் - புலிகள் எந்தநேரமும் தாக்கி அழிக்கக்கூடும்.

800 பயங்கரவாத தற்கொலைப் புலிகள்- கொழும்பு நகருக்குள் ஊடுருவி இருக்கின்றனர். நாட்டைப் பிழவுபடுத்துவதற்கு ரணில் - புலிகளுக்கு இடம்கொடுத்துவிட்டார்.

“என்னிடம் சகல அதிகாரங்களும் இருக்கின்றன. இன்னும் எனக்குற்ற அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. உரியநேரம் வரும்போது, எனது அதிகாரங்களைப் பயன்படுத்துவேன்”.

சந்திரிகா அம்மையாரும், அவர் தம்பி அநுராவும், மக்கள் விடுதலைக் கூட்டணியினரும் மேற்கண்ட பயமுறுதுத்தல் கோஷங்களைதான், கடந்தசில மாதங்களாக கூச்சலிட்டு வந்தார்கள்.

பிரதமர் ரணில் - அமெரிக்காவுக்குப் போய் இருந்தநேரம்தான் உரியநேரம் என்று நினைத்தாரோ, விடுதலைப் புலிகள் வெளிநாடுகளுக்கும் போய் ஆலோசனைசெய்து, சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகளைச் சமர்ப்பித்த நேரம்தான் உரியநேரம் என்று நினைத்தாரோ. தனது அதிகாரங்களை அம்மையார் உபயோகித்து, மூன்று அமைச்சுக்களை அதிரடியாகப் பொறுப்பேற்றார்.

மக்கள் இவரது நடவடிக்கைக்கு ஆதரவாகக் கிழர்ந்தெழுவார்கள். ரணிலையும் அவரது ஆட்சியையும் கலைத்துவிடலாம் என்றும் கனவு கண்டாரோ தெரியவில்லை.

அம்மையாரின் நடவடிக்கைக்கு உள்நாடுகளிலும், உலக நாடுகளிலும் அதிர்ச்சியும், எதிர்ப்பும்தான் கிழம்பினவே தவிர, ஆதரவு கிடைக்கவில்லை. அமெரிக்காவிலிருந்து திரும்பிய ரணிலுக்கு, லட்சக்கணக்கில் மக்கள் திரண்டு அளித்த வரவேற்பு - அம்மையாருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படவில்லை என்று அம்மையாரின் செயலகம் அறிவித்தது.

நாடாளுமன்றம் 19 ஆம் திகதி கூடும் பொழுது, நிதியமைச்சர் தனது வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கலாம். இந்த விவாதத்தில் சுதந்திக்கட்சியினர் பேசும்நேரத்தையும் குறைத்துக் கொள்ளலாம். அரசாங்க ஊழியருக்கு சம்பளஉயர்வு கொடுக்கவேண்டும் என்று நான்தானே சொல்லி வந்திருக்கிறேன் என்று அம்மையாரின் சுருதி குறையத்தொடங்கியது.

இப்பொழுது தேசிய அரசு பற்றியும் பேசத் தொடங்கியிருக்கின்றார்.

அம்மையாருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டுப்பிரேரணை கொண்டுவருவதற்கும் ஆயத்தம் செய்யப்படுவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

ரணில் ஆட்சியைக் கலைப்பதற்கு, ஆளும் கடசியிலிருந்து ஆட்களைப் பேரம்பேசி வளைத்துப்பிடித்திருக்கலாமெனவும் - கனவு கண்டபோது, பொதுஜன முன்னணியிலிருந்து, ரணில் பக்கத்துக்கு யாரும் தாவிவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சமயத்தில் - ‘தேசிய அரசு’ அமைக்கும் யோசனையைத் தெரிவித்ததன் மூலம்- நாட்டைக் காப்பாற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்ள சந்திரிகா முற்பட்டிருக்கிறார்.

தேசிய அரசு சரிப்படுமா? உருப்படுமா?

1965 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் டட்லிசேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தது. ஆட்சிக்குத் தெரிவு செய்யபட்ட டட்லி - மற்றும்பல கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைத்தார்.

1964 ஆம் ஆண்டில் சிறிமா அரசில் இருந்து விலகிய சி.பி.டி. சில்வா குழுவினர், பிலிப் குணவர்த்தனா, வில்லியம் டி சில்வா, தகநாயக்க, ஐ.எம்.ஆர்.ஏ. இறியகொல்ல ஆகியோருடன் - இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும், தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்தன, ஆதரவும் தெரிவித்தன.

டட்லி மாவட்ட சபைகள் அமைப்பதற்காக வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியினர் சார்பில் மு.திருச்செல்வம் செனட் சபைக்கு நியமிக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச் சராகப் பதவியேற்றார்.

சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக்கட்சி, டொக்டர் என்.எம்.பெரேரா தலைமையில் லங்கா சமசமாஜக்கட்சி, பீட்டர் கெனமன் தலைமையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை எதிர்க்கட்சியிலிருந்தன.

மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவருவதற்காகவே, உள்ளூராட்சி அமைச்சராக திருச்செல்வம் பதவியேற்றிருந்தார்.

மாவட்டசபை முயற்சி தள்ளிப்போய்க் கொண்டேயிருந்தது. ஐந்துவருட ஆட்சிக் காலத்தில், மூன்று வருடங்கள் முடிந்து, நாலாவது வருடம் தொடங்கும்கட்டம்.

அமைச்சரவையில் அங்கம்வகித்த கட்சியைச் சேர்ந்தவர்களில், பிரதமருக்கு நெருக்கமாக இருந்த யாரோ, டட்லியும் செல்வநாயகமும், இரகசியமாகச் செய்திருந்த ஒப்பந்தத்தின் நகல் ஒன்றை, எதிர்க்கட்சியில் உள்ள டொக்டர் என்.எம்.பெரேராவிடம் கொடுத்துவிட்டார்.

நாடாளுமன்றக் கூட்டத்திலேயே டொக்டர் என்.எம்.பெரேரா இந்த இரகசிய ஒப்பந்தத்தை அம்பலப்படுத்தி விமர்சித்தார். இது அமுல் செய்யப்படுமானால், நாடு பிளவுபடுமென்று அவரும் சொன்னார்.

அத்துடன், ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. கோணேசராலயப் பகுதியைப் புனித நகராகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையிலும், டட்லி சறுக்கவே - தேசிய அரசுக்குக் கொடுத்த ஒத்துழைப்பைத் தமிழரசுகட்சி விலக்கிக்கொண்டது.



இதுதான் இலங்கையில் தேசிய அரசாங்கம் அமைந்து முடிந்தகதை.

இப்போது அம்மையார் கேட்கும் தேசிய அரசு அமைந்தால், யார் யார், எந்தெந்தக் கட்சிகள் இதில் அங்கம்வகிக்கும்.

ஜனாதிபதியே தேசிய அரசு அமைக்கக் கேட்பதால், இப்பொழுதுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள், உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), மக்கள் ஐக்கிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய முன்னணி (நு.ஆ), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தமிழத் தேசியக் கூடடமைப்பு ஆகிய எல்லாக் கட்சிகளும் தேசிய அரசுக்கு இணங்கிவருமா என்பது கேள்விக் குறியானவிடயம். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) பிடிவாதம் பிடிக்கும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் நாட்டைப் பிரித்துவிடும் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்க்கும்.

பேச்சுக்களில் தனித்தரப்பாகக் கலந்து கொள்ளாவிட்டால், சமாதானப் பேச்சுக்கு ஒததுழைக்க முடியாதென்று முஸ்லிம் காங்கிரஸ் சொல்லும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - இடைக்கால நிர்வாகத்துக்கு மலையகத்தில் அவசியமில்லை என்று சொல்லலாம்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பான தன்னாட்சி அதிகாரசபை அமைத்தாலே நாட்டில் சமாதானம் வரும் என்றும் சொல்லும்.

இப்படி ஆளுக்கொரு பக்கம் இழுத்துக் கொண்டிருந்தால், தேசிய அரசு உருப்பட முடியுமா? நாடுதான் தாங்குமா?

இது சந்திரிகா அம்மையாருக்கும் தெரியும். ஆனாலும், அதிரடி நடவடிக்கைக்குச் சமாளிப்புச் சொல்லிப் பார்க்கிறார் . அவ்வளவுதான்!

**எஸ்.எம்.ஜி**

# கிராமியக் கலைவளர்ச்சிக்காகப் பாடுபட்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்

## காரியாலய திறப்புவிழாவில் மெற்றாஸ் மெயில்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும், துறைசார்ந்த கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், ஸ்தாபிக்கப்பட்ட பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம், கடந்த 10 ஆண்டுகளில் பல முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிகண்டு, இவ்வருடம் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை மிகச்சிறப்பாக நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. கழகத்திற்கான புதிய காரியாலயத் திறப்பு விழாவில் உரையாற்றிய பாரம்பரிய மேம்பாட்டு கழகச் செயலாளர் மெற்றாஸ் மெயில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய காரியாலயத் திறப்பு விழாவில் மிகவும் முக்கியமான ஒரு விடயம் இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தனித்தன்மை கொண்ட நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமியக்கலை வளர்ச்சிக்காக பாடுபட்டு அமரத்துவம் அடைந்தவர்களை கௌரவிக்குமுகமாக அவர்கள் படங்களை காரியாலயத்தில் வைத்து திரைநீக்கம் செய்துள்ளோம்.

இசைநாடகத்தைப் பொறுத்தளவில் மாபெரும் நடிகனாகவும், பல நடிகர்களை உருவாக்கியவராகவும், தனித்துவம் கொண்ட நடிகனாகவும், நடிகர்களுக்கொல்லாம் நடிகனாகவும் விளங்கிய நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் படத்தை வைப்பதில் பெரிதும் பெருமையடைகின்றோம். இசைநாடகம் என்றால் “வைரமுத்து”,“வைரமுத்து” என்றால் இசைநாடகம் என இன்றும் மக்கள் போற்றுகின்றார்கள்.

நாட்டுக்கூத்தைப் பொறுத்தளவில், அமரர் நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப் தனியிடத்தை வகித்தவர். இவர் நாட்டுககூத்து நடிகனாக மட்டுமல்லாது, பல கலைஞர்களைப் பயிற்றுவித்து உருவாக்கியவர். தனது பணத்தில் பல கலைஞர்களுக்கு ஊதியம் கொடுத்து, கூத்துக்களை மேடையேற்றி கலைத்தொண்டு செய்தவர். போராசிரியர் சு.வித்தியானந்தன் ஓரிடத்தில் குறிப்பிடும்போது, பூந்தான் நாட்டுக்கூத்து மரபின் வரலாறு, நாட்டுக்கூத்து வளர்ச்சியின் அடிச்சுவடு, அவர் ஒரு கலைக் கோயில் என்றதுடன் அவர்களுடைய நாவில் கம்பீரமான தோற்றமும், இனிய குரல்வளமும் அவருடைய முன்னேற்றத்திற்கு சாதகமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, அண்ணாரை நினைவு கூர்ந்து, இக்காரியாலயத்தில் படத்தை வைத்து திரைநீக்கம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

யாழ்ப்பாண கலைவரலாற்றில் காத்தவராயன் கூத்திற்கு தனியிடம் உண்டு. இக்கூத்தினை பல பரம்பரையினர் சிஷ்ய முறையில் கற்றுப் போற்றிவந்துள்ளனர். நெல்லியடியைச் சேர்ந்த அமரர் சி.கணபதிப்பிள்ளை காத்தவராயன் கூத்தில் மிகவும் சிறந்து விளங்கிய அண்ணாவியாராவார்.

இவரின் உதவியுடன் யாழ். பல்கலைக்கமக மாணவர்களால், காத்தவராயட கூத்து பழக்கி அரங்கேற்றப்பட்டு பல புகழையும் பெற்றது நினைவுகூரத்தக்கது.

கிராமிய கலைகள் தெரிந்தவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். அம்பா, கிராமிய நடனம், கரகம், காவடி, சிலம்படி, கிராமியப் பாடல், ஆகியவற்றில் மிகவும் தேர்சசி பெற்றவரும், காத்தவராயன் கூத்தில் காத்தானாக சிறப்பாக ஆற்றுகை நடத்தியவர் அண்ணாவியர் வேலு செல்வமணி. இவரின் பிறப்பிடம் பலாலி ஆகும். இவர் பலகாலம் எம்முடன் இணைந்து செயற்பட்டவர். அன்னாரின் இழப்பை பெரும் இழப்பாகக் கருதுகிறோம். அன்னாரின் உருவப்படத்தை காரியாலயத்தில் வைப்பதில் பெருமையடைகின்றோம்.

பாரம்பரியக் கலைஞர்களாகிய நாம் அமரர் வி.வி.வைரமுத்துவிற்கும், அமரர் பூந்தான் யோசேப்பிற்கும், எடுக்கும் இக்கௌரவம் காலம் கடந்தவை தான் எனினும், இன்றாவது இவர்கள் உருவப்படங்களை வைத்து அவர்களைக் கௌரவிப்பது கலைஞர்கள், ஆர்வலர்கள் மத்தியில் பெரும் மகிழ்வையூட்டும் என்பதில் ஐயமில்லை.

அவர்கள் வளர்த்த கலையின் எச்சங்கள்தான் இன்று நூலிழைவிட்டு பரந்து காணப்படுகிறது. இதனால் கலைத் தேவியின் பிரதி நிதிகளைப் போற்றுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விபத்துகளுடன் தொடர்புடைய சாரதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற இராணுவ வாகனங்கள் சம்மந்தப்பட்ட வழக்குகள் தொடர்பான குற்றப்பத்திரங்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர். அரியாலை, மடத்தடி, குருநகர், நாவாந்துறை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் சம்மந்தப்பட்ட சாரதிகளுக்கு எதிராகவே, இந்தக் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அரியாலைச் சம்பவத்தில் தொடர்புடைய ஆட்டோச் சாரதி, சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஆட்டோ செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். மடத்தடியில் இரு இளைஞர்களை மோதிக் கொலைசெய்த இராணுவ வாகனச் சாரதி, கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதியை பெற்றிருக்கவில்லை எனவும், நாவாந்துறையில் விபத்துக்குள்ளான இராணுவ வாகனம் கோன் அற்றது எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரங்களை யாழ்.பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தாக்கல் செய்திருந்தார். இவை தொடர்பாக வழக்கு விசாரணைகளை நீதிபதிகள் இ.த விக்கினராசா, ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோர் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ஸினுள் மயங்கிவீழ்ந்த வயோதிபர் மரணமானார்!

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் - பஸ்ஸினுள் மயங்கிவீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் இராசவீதி கோப்பாயைச் சேர்ந்த சின்னப்பு சின்னத்துரை (வயது 67) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர், நயினாதீவு சென்றுவிட்டு, குறிகட்டுவானிலிருந்து பஸ் மூலம் யாழ். நகர் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார். திடீரெனப் பஸ்ஸினுள் மயக்கம்போட்டு வீழ்ந்தவரை - பஸ் நடத்துனரும், சாரதியும்- யாழ். போதனா வைத்தியசாலைக்கு விரைவாக எடுத்துவந்தனர். வழியில் பயணிகள் எவரும் இறங்க அனுமதிக்கப்படவில்லை. பயணிகளுடனேயே வைத்தியசாலைக்கு வந்தபோது, குறிப்பிட்ட வயோதிபர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உறவினர்களுக்கு - வைத்தியசாலை நிர்வாகம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன்பின்னர், உறவினர்கள் வந்து சடலத்தைப் பொறுப்பேற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக் குண்டுத்தாக்குதலில் நான்கு பொதுமக்கள் பலி!

(பஷ்றா)

ஈராக்கின் தென்பகுதியில் 'பஸ்ரா'வில் பிரித்தானிய படைகளின் பாவனையில் உள்ள பகுதியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில், நான்கு ஈராக்கிய குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தின் போது, வாகனம் ஒன்று வெடித்துச்சிதறிய தாகவும், பலவாகனங்கள் சேதமுற்றுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர், அப் பாதையூடாக பிரித்தானிய வண்டிகளின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

சிலமணிநேரத்தில் இரண்டாவது குண்டு வெடிப்பொன்றும் நடைபெற்றதாகவும், இத் தாகுதல் தொடர்பான சேதவிபரங்கள் எவையும் அறிவிக்கப்படவில்லை என, பிரஞ்சு செய்திஸ்தாபனம் அறிவித்துள் ளது.

ஞாயிற்றுக்கிழமை பஸ்ராவில் பிரித் தானிய இராணுவ வாகனம் ஒன்று சேதத்துக்குள்ளானது. பிரித்தானிய படை களுக்கு, அப்பிரதேசத்தில் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்பட்டதுபோன்று இது வரை இழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

சியா முஸ்லீம்கள் வாழும் அப்பகுதி யில் ஈராக்கியர்களுக்கும் பிரித்தானிய படைகளுக்கும் இடையே சுமூகமான உறவுகள் இதுவரை நிலவி வந்துள்ளதாக பி.பி.சிஇன் கிம்கற்றாஷ் தெரிவித்துள் ளார்.


இதனிடையே அமெரிக்க அரசின் ஆதர வுடன் 'ஸியா' முஸ்லிம்களின் பிரதேசமான 'சாபூ' நகரில் நகரசபைத் தலைவராக கடமை புரிந்த மெகனாட் காஷி சுல் காபி நகரசபை யின் தலைமையகத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போர்வீரருடன் வாய்த்தர்க்கத் தில் ஈடுபட்டிருந்த நேரத்தில், துப்பாக்கி காயங்களுக்குட்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை மரணமடைந் ததாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித் துள்ளனர்.

# ஆப்கான் போரில் கைதானவர்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்க இணக்கம்!



ஆப்கான் போரில் கைதுசெய்யப்பட்டு கியூபாவில் உள்ள தீவான "குவன்ரணமோ" வில் உள்ள முகாமில் தடுத்துவைக்கப்பட் டுள்ளவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக் களை அமெரிக்க நீதிமன்றம் விசாரணை செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 16 கைதிகள் சார்பாக, அவர்களது வழக்கறிஞர்கள் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள். தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது என, அவர்கள் தெரிவித்துள்ளார் கள். இதே நேரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்கள், அமெரிக்க பிரஜை கள் அல்ல எனவும், அவர் கள் அமெரிக்க மண்ணில் தடுத்துவைக்கப்பட்டு இருக் கவில்லை எனவும், இத னால் அமெரிக்காவின் போர்க்கால குற்றவாளி களை சட்டங்களின் மூலம் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாதென அமெ ரிக்க அதிபர் புஷ் தெரி வித்துள்ளார்.



சென்ற மாதம் வாஷிங் ரனில் உள்ள செஞ்சிலு வைச் சங்க அதிகாரிகள் "குவன்ரணமோ" வில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்க ளின் மோசமானநிலை தொடர்பாக, தமது அதிருப்தியை தெரிவித்திருந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களின் மேன்முறையீடுகளை, உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக வும், யூன் மாதம் முடிவுகளை அறிவிக்க வுள்ளதாகவும், ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# ஆந்திரப் பிரதேச படகு விபத்தில் பதினைந்து பேர் உயிரிழந்தனர்!

இந்தியாவின் தென்பகுதியான ஆந்திரப் பிரதேசத்தில் அமைந் துள்ள கோதாவரி ஆற்றில் 50 மக்களுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்த படகு ஒன்று, நீரில் மூழ்கியதில் 15 பேர்வரை ரஇறந்துள்ளனர். 35 பேர் பாதுகாப்பாக நீந்திக்கரை சேர்ந்துள் ளார்கள்.

சென்றமாதம் நடைபெற்ற விபத்துடன் சேர்த்து 2 ஆவது சம்பவம் இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் கிருஷ்ணா நதியில் படகு ஒன்று மூழ்கியதில் 29 பேர்வரை கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

UNICEF அனுசரணையுடன்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கும்

மாபெரும் பரிசுப் போட்டி

உலக எயிட்ஸ் தினம்
டிசெம்பர் 1

உலக எயிட்ஸ் (AIDS) தினத்தை விழிப்புணர்வுடன்
நினைவு கூர இன்றே யாவரும் ஒன்றிணைவோம்.

இதனை முன்னிட்டு வினாவிடை - சுவரொட்டி
ஓவியப்போட்டிகள் எம்மால் நடத்தப்படவுள்ளன.
மேலதிக விபரங்களை நாளைய பத்திரிகையில் வாசியுங்கள்!

எயிட்ஸ் உயிர்கொல்லி நோய்
மாற்ற மருந்தில்லை
வருமுன் தடுக்க வழியுண்டு!

உங்களுக்காகவே 120 இற்கும் மேற்பட்ட பரிசுகள்!


அள்ளித்தர நாங்கள் ரெடி
பெற்றுக்கொள்ள நீங்க ரெடியா?

சுலபமான போட்டிகள் பெறுமதிமிக்க பரிசுகள்
நாளை மீண்டும் சந்திப்போம்!

T.R.R.O.,
4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(சி-1791)

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ரஷ்யாவிற்கு 3நாள் விஜயம்!



மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் 'அடல் பிஹாரி வாஜ்பாய்' நேற்று ரஷ்யாவிற்கு சென்றுள்ளார். தனது விஜயத்தின்போது 10 உடன்பாடுக ளில் ரஷ்யாவுடன் கைச்சாத்திட வுள்ளார்.

இரு நாடுகளும் பாதுகாப்பு, விண்வெளித்துறை ஆகியவற்றில் இணைந்து செயற்படவுள்ளன.

ஈராக் தொடர்பாக இந்தியாவும், ரஷ்யா வும ஒரேவிதமான கருத்துக்களையே கொண்டுள்ளன. இஸ்லாமிய அடிப்படைவா திகளால் இரு நாடுகளுமே பாதிப்புக்குள் ளாகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சவுதி குண்டுத்தாக்குதல்; தீவிரவாதிகள் கைதாகினர்

சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாட் டில், மக்கள் குடியிருப்புத் தொகுதியில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலில், சம்பந்தப் பட்டிருந்த தீவிரவாதிகள் சிலர் கைதுசெய் யப்பட்டுள்ளார்கள்.



சவுதி அரேபியா, முஸ்லிம் தீவிரவாதிக ளுக்கெதிராக கண்காணிப்பினை அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சவுதியில் உள்ள மன்னரை பதவியிலி



ருந்து வெளியேற்றுவதற்கு அல்கொய்டா தீவிரமாக முயற்சி செய்து வருவதாக அமெ ரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்.

# ஊர்சுற்றி எழுதுவது

அரசியலில் குழறுபடிகள் ஏற்படும் போது, இடையில் இருப்பவர்கள் பலர் தமது நலத்தையே பேணிக்கொள் வார்கள்.

பலருக்குப் பாதிப்புக்கள் ஏற்படலாம் யாரோடு, என்ன, எப்படி எதைப் பேசுவது என்று தெரிந்து பேசிக் கொள்பவர்களும் புத்திசாலிகள்.

ஒருவருடைய அமைச்சர் பதவிதான் பறிபோகுது என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். அவரின் அமைச்சின கீழ் அவருக்கு விசுவாசமாக இருந்த அத்தனை ஊழி யர்களுக்கும் வேலை நிம்மதியில்லை நிரந்தரமாகவும் இருக்காது.

அந்த அமைச்சின் கீழ் எத்தனை இலாபங்கள் இருக்கின்றனவோ, அத்தனை இலாபங்களில் இருப்ப வர்கள் எல்லோருமே, தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாமல் வாழத்தெரிந்திருப்பார்கள்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாராக இருந்த ஒஸ் ரின் பெர்னான்டோ தாம் லண்டன் செல்லும் போது தமது உள்மனதில் ஏதோ சொன்னதால் தமது வேலைகள் அனைத்தையும் முடித்து தமது மேசை இலாச்சியில் வைத்திருந்த தமது குடும்பத்துடன் தொடர்புடைய இரண்டு கோப்புகளையும் கூட எடுத்துத் தமது மனைவியிடம் கொடுத்தாராம்.

தான் இப்பொழுது வேலையற்ற பட்டதாரி என்று, ஒஸ்ரின் சொல்லியிருக்கிறார். தான் தமது மாதாந்தச் சம்பளத்தைத் தவிர வேறு எந்தப்பணத்தையும் தமது கையால் தொட்டது இல்லையென்பதால், எதற்கும் தமக்குப் பயமில்லை என்று கூறியிருக்கிறார்.

சண்டேலீடர் என்ற வாரப்பத்திரிகை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தனது ஆசிரியர் தலையங கத்தில் போடு போடென்று போட்டுத்தள்ளியிருக்கிறது.

பண்டாரநாயக்க குடும்பமே பதவி வெறிபிடித்தது என்று இந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. பண்டார நாயக்க மறைந்தும் நல்லவிஷயங்களுக்கு மட்டுமல்ல, அதற்கு மாறான விஷயங்களுக்கும் அவரது பெயர் அடிபட்டுக்கொண்டுதான் இருக்கின்றது.

ஆட்சி மாற்றங்கள் அமைச்சு மாற்றங்கள் பெரிய பதவி மாற்றங்கள் நடைபெறும் சமயங்களில், இவற்று டன் சம்பந்தமல்லாதவர்களும்கூட பொறுப்பற்ற முறை யில் கேடுகள் செய்யக்கூடும்.

ஒருதர் அல்லது சிலர் பதவியிலிருக்கும் போது நாட்டுக்கு நல்லதென்று எதிர்காலத்தில் கிடைக்க முடியாதவையென்றும், இருப்பதை இழந்தால் மீண்டும் பெறமுடியாது என்றும், சிலவற்றைத் தேடிவைத்திருப் பார்கள்.


உதாரணமாக மறைந்த தமிழ் நாடகக் கலைஞர் கள், கலையரசு சொர்ணலிங்கம் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, நடிகமணி வைரமுத்து போன்ற மற்றும் பல கலைஞர்களின் நாடகத்தின் சில பகுதி கள், அவர்களின் ஒலித்த பாடல்கள், வசனங்கள் ஒலிப் பதிவு செய்துவைக்கப்பட்டிருக்கலாம்.

இவை இலங்கை வானொலியில் இருக்கவேண்டும், ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்திலும் இது போன்ற கலைஞர்கள் சம்மந்தப்பட்ட ஒலிப்பதிவு நாடாக் கள் இருக்கக் கூடும். தேசிய சுவடிக் கூட்டுத்தாபனத் தில் தேடிக்கிடையாத சுவடிகள் சில இருக்கலாம்.

ஆட்சிமாற்றம், பதவிமாற்றங்கள் நடைபெறும் சமயங் களில், இவற்றுடன் சம்பந்தப்படாதவர்கள் கூட இதெல் லாம் எதற்கு என்று கோணங்கித்தனத்தில் தூக்கி வீசி எறியவோ பழுதாக்கவோ கூடும்.

இப்படி முன்னர் சில அரிய பொருட்கள் அநியாய மாய்ப் போயிருப்பதாக தகவல். இந்த நிலை இனியும் நீடிக்கக்கூடாது. அரிய பொருட்களை பிரதிகள் எடுத் தும், ஒலிப்பதிவும், ஒளிப்பதிவு செய்தும், பாதுகாப் பாக கொழும்புக்கு வெளியேயும், வடக்குக்கிழக்கிலும் பாதுகாத்து வைப்பது பயனளிக்கும். என்கிறார் நண்பர்.

ஊதவேண்டிய சங்கை ஊதவிட்டிருக்கிறேன். விடியிற நேரம் விடியட்டும்.



பிரான்சில் உள்ள அலப் மலைத்தொடரின் பிரயாணம் செய்வதற்கென உருவாக்கப்பட்ட கேபிள்கார். இது 2 அடுக்குகளைக் கொண்ட 200 பனிச்சறுக்கல் வீரர்களையும் உபகரணங் களையும் எடுத்துச் செல்லக்கூடியது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர்களுக்கு தீங்கிழைக்கப்பட்ட போதெல்லாம் குரல் கொடுக்காதவர்களுக்கு மூன்றாம் தரப்பா?

## நியாயமில்லை என்கிறார் இரா.சம்பந்தன் எம்.பி.

(கொழும்பு)

தமிழர்களுக்கு தீங்கிழைக்கப்படும் போதெல்லாம் மௌனம் சாதிக்கும் முஸ்லிம் மக்களுக்கு சமாதானப் பேச்சுக்களில் எவ்வாறு மூன்றாம் தரப்பு அந்தஸ்தை கொடுக்க முடியுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயலாளர் இரா.சம்பந்தன் கேள்வியெழுப்பினார்.

நேற்றுக்காலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் வைத்து, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

நாட்டில் யுத்தமற்ற சூழ்நிலை ஏற்படுத்தியிருந்த அமைதியைக் குழப்பும் வகையில் ஜனாதிபதியின் நடவடிக்கை அமைந்துள்ளது.

மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்ற ஜனாதிபதியின் செயலானது அவரின் சுயரூபத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இது மிகவும் ஓர் பாதகமான செயலாகும். ஜனாதிபதியை நாம் ஒருபோதும் நம்பவில்லை. அவரின் செயற்பாடுகள் நம்பக்கூடியவகையில் இதுவரையில் இடம்பெற்றதில்லை. இனியும் அவர் நம்பகமான முறையில் நடப்பார் என நாம் நினைக்கவில்லை.

அவரால் ஒரு சமாதான முயற்சி மேற்கொள்ளப்படுமானால், அது தமிழ்களுக்குப் பாதகமானதாகவே அமையும். அவருடன் இணைந்து நிற்கும் ஜே.வி.பியின் கொள்கைகளே இதற்குச் சான்று.

தமிழருக்கு சிங்களவர்களாலும், பெரும்பான்மை அரசாங்கங்களாலும் துன்பம் இழைக்கப்படும் போதெல்லாம் மௌனம் சாதித்து அவற்றை வரவேற்பதுபோல் இருக்கும் முஸ்லிம்களும், அவர்களது அரசியல்வாதிகளும் மூன்றாம் தரப்பைக் கோருவதில் எவ்வித நியாயமும் இல்லை.

அவர்கள் வேண்டுமானால் ஏதோ ஒரு தரப்பில் இருந்துகொண்டு தமது நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளட்டும். மூன்றாம் தரப்பாக பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதாகக் கூறி பேச்சுவார்த்தையை குழப்ப முயலக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(01)

## நாஞ்சந்தி

'நாட்டு நிலைமை பற்றி ஆராய பிரதமருக்கு ஜனாதிபதி அழைப்பு'
'புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதி தயாராவே உள்ளார்'
'ஜனாதிபதியின் தேசிய அரசமைக்கும் ஆலோசனைக்கு ஜே.வி.பி அதிருப்தி'
'புலிகளுடன் பேசவிரும்பும் ஜனாதிபதியின் அறிவிப்புக்கு சிஹல உறுமய எதிர்ப்பு'
இவை எல்லாம் செய்திகள்... இன்றைய செய்திகள். இவை எதைக்காட்டுகின்றன.?
நாட்டின் அவலநிலையையே காட்டுகின்றன!
நிற்க:-
'ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு தூதுவர்கள் கடும் எதிர்ப்பு'
'அரசியல் நெருக்கடிகள் முடிவுக்கு வரவேண்டும் என அமெரிக்க தூதரகம் அறிக்கை'
'பிரதமர் ரணிலுடன் ஜனாதிபதி இணைந்து செயற்படவேண்டும்'
இவைகளும்கூட செய்திகள் தான்! இவைகள் எதைக்காட்டுகின்றன?
சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி எதிர்கொள்ளவேண்டிய சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களையே காட்டுகின்றன.
'அழுத்தங்களுள் ஆட்சி நடக்கும் நாடு, அவலம் நிறைந்த நாடாகவே இருக்கும்' என்றார் வாத்தியார்.
'அவலங்களைச் சந்திக்கும் நாட்டில் அமைதியிருக்காது' என்றார் கந்தரம்மான்.
'அமைதியற்ற நாட்டில் சமாதானம் எப்படிச் சாத்தியமாகும்?' என்றார் நிருபர் கே.கே...
அப்படியானால் சமாதானமே வராதா! என்று ஏங்கியபடி சந்தியில் குந்தினார் ஒருவர்.
'சமாதானம் வருமோ வராதா... சண்டை வராமல் இருந்தால் சரி.'
என்று கூறியபடியே நகர்ந்தார் உயர்பாதுகாப்பு வலய வாசி ஒருவர்.

தெருவாசி

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நோர்வே தூதுக்குழுவைச் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

காலை 10 மணியளவில் நோர்வேத்தூதுவராலயத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பிற்கு முன்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வினருடனான சந்திப்பொன்றையும் நோர்வேத் தூதுவராலயம் நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# புலிகள் சமர்ப்பித்த திட்டவரைபு யோசனை நாட்டைப் பிரிவினைக்கே இட்டுச்செல்லும்!

## என்கிறது பொதுஜன ஐக்கிய முன்னணி

இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கும் பிரேரணைகள், நாடு பிளவுபட அல்லது பிரிவினை ஏற்பட வழிவகுக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்தத் திட்டவரைபின் சில பிரேரணைகள் அரசியல் யாப்பை மீறியுள்ளது.

எனினும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெறுவதை பொதுஜன ஐக்கிய முன்னணி விரும்புகின்றது.

அரசியல் யாப்புத் திருத்தமொன்றில் இடைக்கால நிர்வாக அமைப்புக்கான பிரேரணைகள் உள்ளடக்கப்படுவதையே பொதுஜன ஐக்கிய முன்னணி விரும்புகின்றது.

இடைக்கால ஆட்சிக்கான பேச்சு என்ற வகையில் கலந்துரையாடல்களை மட்டுப்படுத்த விரும்பவில்லை.

விடுதலைப் புலிகளுடனான எதிர்கால சமாதானப் பேச்சுக்களை பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பாக, ஜனாதிபதி நடத்த வேண்டுமென ஐக்கிய தேசிய முன்னணி கூறுகின்றது.

2000 ஆம் ஆண்டில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் அரசியல் யாப்புச் சட்டமூல அடிப்படையில் இந்தப் பேச்சுக்களை நடாத்துவது உகந்தது என்று, பொதுஜன ஐக்கிய முன்னணி நம்புகின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குடியிருப்புக்களை...

வெள்ளம் உட்புகுந்துகொண்டது. இவ்வாறு வெள்ளம் புகுந்ததால் பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்களே, படைமுகாமிற்கு முன்னால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது குடியிருப்புக்களுக்கு அப்பால் படையினர் பாதுகாப்பு வேலிகளை அமைத்து, தாம் வசிப்பதற்கு குடியிருப்புக்களை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் 521 ஆவது படையணியின் தளபதியிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், படை உயரதிகாரிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களையடுத்து, பொதுமக்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர். (34,202)

### நோர்வேயின்...

பொலிஸார் அரைவாசி கட்டப்பட்ட நிலையில், நீர்மூழ்கி ஒன்றையும் அதிவேகப் படகுகளையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸிடம் இந்தச் செய்தி குறித்து மேற்படி இணையத்தளம் வினவியதாகவும், அதற்கு அவர் இந்தத் தகவல் தமக்கு புதிதாக இருப்பதாகவும், நோர்வேயின் முன்னாள் படையதிகாரிகள் கடற்புலிகளுக்கு பயிற்சியளிப்பது தொடர்பான செய்தியைத் தாம் இப்போதே முதன்முறையாக கேள்விப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

### நாட்டின் ஏனைய....

அசௌகரியங்களுக்கு உட்படுவதுடன், வெளிநாட்டு உதவிகளும் தாமதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். (01)

### ஐ.தே.க...

முறையிடப்பட்டுள்ளதாகவும் -

ஐக்கிய தேசியக் கட்சியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெத்தயாராச்சி, களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.டி.அருபரட்ண, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகரா, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.அபேநாயக்க, கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க பிரேமதாஸ, அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.பி. எக்கநாயக்க ஆகியோரே ஜனாதிபதியின் கட்சியினரால் பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்படவிருந்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (01)

### சமாதானப் பேச்சு...

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடு குறித்து, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி செயலக வட்டாரங்கள், இத்தச் சந்திப்பில், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான மாபெரும் கூட்டணியில் இணைந்துகொள்ள வருமாறு ஐக்கிய தேசியக்கட்சி அழைக்கப்பட்டதாகவும் தெரிவித்தன.

இதேவேளை - ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கரு ஜெயசூரிய, மலிக் சமரவிக்கிரம ஆகியோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆனந்தசங்கரி மீது ஒழுக்காற்று...

நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம், கட்சியின் செயலாளரான இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், ஆனந்தசங்கரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழுவைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மத்திய செயற்குழுக் கூட்டத்தை தாமதமின்றிக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்வரும் 16 ஆம் திகதி அல்லது 23 ஆம் திகதி இந்தக் கூட்டத்தை நடத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை கிளைகள் ஆனந்தசங்கரி- கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகவேண்டும். அல்லது அவர் மீது செயற்குழு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமெனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதியின் தேசிய அரசு...

வும், பிரதமர் கேட்கவிருப்பதாகவும், ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த முடிவுகளுக்கு ஜனாதிபதி இணங்காவிட்டால் பொதுத் தேர்தலொன்றை எதிர்கொள்ள அரசு தயார் என்பதையும் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவிக்கவுள்ளதாக கூறிய அமைச்சர் பீரிஸ், தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க முடியும். ஆனால், நீதிமன்றக் கட்டளையை முன்கொண்டு தற்சமயம், நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்தமை செல்லுபடியாகாது, அரசியலமைப்பின் நான்காவது சரத்தின்படி, நீதிமன்றத்தின் சில விசேட அதிகாரங்களும் நாடாளுமன்றத்திற்கு உண்டு. எனவே, அந்த அதிகாரத்தைக் கொண்டு, நாடாளுமன்ற அமர்வை மீண்டும் கூட்டுமாறு அரசாங்க மற்றும் அரசாங்க ஆதரவுக் கட்சிகளின் 130 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரியுள்ளனர் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.(01)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1563 திகதி: 11.11.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| R | 9 | 3 | 9 | 4 | 0 | 0 |

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 94.77 | 95.63 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.75 | 160.06 |
| 1 யூரோ | 108.74 | 110.17 |
| 1 சுவிஸ் பிராங் | 68.62 | 70.74 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 67.26 | 68.89 |
| 1 ஜப்பானிய யென் | 00.87 | 00.88 |
| 1 சவூதி றியால் | 25.38 | 25.38 |


## ஓராண்டு நினைவலைகள்

24 - 04 - 1932



12 - 11 - 2002

### F.P.அந்தோனிப்பிள்ளை [சிறில்]

(BSc, Dip.in.Edu, S.L.E.A.S)

(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி)

ஆசிரிய தீபமொன்று அணைந்து ஓராண்டும் ஆகிவிட்டதாம்!
இன்றோ நேற்றல்லவோ கண்டோம் என்றிருந்தோம்.
நட்சத்திரங்களினை உச்சிவானிலே ஏற்றிவிட்டு
அஸ்தமித்த சூரியனைப்போன்று
எம்மையெல்லாம் ஒளிரவைத்துவிட்டு
நீங்கள் மட்டும் உறங்கிவிட்டீர்கள்.
ஆனாலும் எம்முள் உங்கள் நினைவுகள்
இன்னமும் உறங்கவில்லை - அதனால்
இன்னமும் நீங்கள் வாழ்ந்து கொண்டேதான் இருக்கின்றீர்கள்.
இனியும் வாழ்ந்து கொண்டேதான் இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா கர்த்தரின் கிருபையில்
ஆசீர்வதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இங்ஙனம்
தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

Box 917, சரஸ்வதி
வித்தியாலய வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(526)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.